5

Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 15

ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்:389
National Tamil Daily
மலர் 10
இதழ் 258
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் கீலக ஐப்பசி 11 ஷஃபான் 4 ஞாயிற்றுக்கிழமை (27-10-68

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்

[illegible] கோர்ப்பரேஷன்
[illegible] கொழும்பு

குடியேற்ற வாசிகளுக்கு இனி எட்டு ஏக்கர் நிலம் கிடைக்கும்

உணவு உற்பத்தியை பெருக்க மற்றொரு முயற்சி

கொழும்பு, சனி

குடியேற்றத்திட்டங்களில் குடியேறுவோருக்கு இனி எட்டு ஏக்கர் நிலம் வழங்குவதென்று அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. இதுவரை நெற் செய்கைக்கு மூன்று ஏக்கரும் மேட்டுக் காணியாக இரண்டு ஏக்கரும் குடியேற்றத்திட்டங்களில் வழங்கப்பட்டு வந்தது.

இனி நெற்செய்கைக்கு ஐந்து ஏக்கரும் குடியிருப்புக்கு மேட்டுக்காணி மூன்று ஏக்கருமாக மொத்தம் எட்டு ஏக்கர் நிலம் குடியேற்றவாசிகளுக்கு வழங்கப்படும்.

மொத்தம் ஐந்து ஏக்கர் வழங்கப்பட்ட குடியேற்ற வாசிகள் உற்பத்திசெய்யும் நெல்லும் மற்றும் உணவுப் பொருள்களும் தங்களுடைய தேவையை நிறைவேற்றக் கூடியதாகவே இருக்கிறதே யொழிய நாட்டின் தேவையைப் பூர்த்திசெய்வதற்கு உதவக்கூடியதாக இல்லையென்று அரசாங்கம் கருதுவதே கூடியதொகையான ஏக்கர் வழங்குவதெனத் தீர்மானித்திருப்பதற்குக் காரணமாகும்.

மனிதனுடன் விண்வெளிக்கலம் ரஷ்யா நேற்று அனுப்பியது

மாஸ்கோ, அக். 26

மனிதனுடன் விண்வெளிக் கலமொன்றை சோவியத் ரஷ்யா இன்று வானவெளிக்கு அனுப்பிவைத்தது.

ஒரு வருட காலத்துக்கு முன்னர் நடந்த துயரச்சம்பவத்துக்குப் பிறகு முதல் தடவையாக இன்று ஆளுள்ள விண்வெளிக் கலத்தை அனுப்பியது.

இந்த விண்வெளிக் கப்பலில் பூமியைச் சுற்றிக் கொண்டிருக்கும் கேர்ணல் பெரே கோவாய் விண்வெளிக்கலம் சகிவர இயங்குவதாகவும் தனது உடல் நிலை சரியாக இருப்பதாகவும் அறிவித்துள்ளார்.

தரைக்கும் விண்வெளிக் கப்பலுக்குமிடையே ரேடியோத் தொடர்புகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன.

கடந்த வருடம் ஏப்ரலில் ரஷ்யா அனுப்பிய விண்வெளிக்கப்பல் உடனேயே விழுந்து நொறுங்கியதில் அதில் பயணம்செய்த கேர்ணல் குமரோவும் உயிரிழந்ததை நினைவிருக்கலாம்.

1965ல் மார்ச்சில் ரஷ்யா மனிதனுடன் அனுப்பிய விண்வெளிக் கப்பல் சாதனையொன்றை நிலைநாட்டியது. விண்வெளிக் கப்பலிலிருந்து வெளியே இறங்கியொருவர் [illegible] நிமிடம் விண்வெளியில் சஞ்சரித்து மீண்டும் கப்பலுக்குள் நுழைந்து ரஷ்யா புதிய சாதனையொன்றை நிலைநாட்டியது.

இப்போது அனுப்பப்பட்டுள்ள விண்வெளிக்கலம் 88 6 நிமிடத்துக்கு ஒரு தடவை பூமியைச் சுற்றிக் கொண்டிருக்கிறதாக அறிவிக்கப்படுகிறது.

யாழ். நகரில் லங்கா சலுசல

கொழும்பு, சனி

லங்கா சலுசல மொத்த விற்பனைக் கிளையொன்று நவம்பர் மாதம் முதல் தினமன்று யாழ்ப்பாணத்தில் திறக்கப்படவிருக்கிறது.

அனுராதபுரம் மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் லங்கா சலுசல கிளைகள் திறக்கப்படவிருக்கின்றன. இவை மொத்த வியாபாரத்தில்தான் ஈடுபடும்.

பலி

புன்னாலைக்கட்டுவன் சனி

கன்னுக்கு கொத்தியாவடி வைரவர் கோயில் திருவிழாப் பண்டிகை அன்று நடைபெற்ற போது ஐந்நூறுக்கும் அதிகமான ஆடுகள் பலியிடப்பட்டனவாம்.

தீவுப் பகுதி

படகுச் சேவை சீராக எம். பி. தெரிவித்த யோசனை

கொழும்பு, சனி

தீவுப்பகுதி மக்கள் பிரயாணம் செய்வதில் மிகவும் கஷ்டம் அனுபவித்துவருகிறார்களென்றும் நிலைமை சீராகுவதற்கு படகுச் சேவையை பொதுமராமத்துப் பகுதி ஏற்று நடத்த வேண்டுமெனவும் மக்கள் பிரதிநிதிகள் சபையில் தீவுப்பகுதி எம். பி. திரு. வி. நவரத்தினம் கேட்டுக்கொண்டார்.

இதற்குப் பதிலளித்த போக்குவரத்து அமைச்சர் திரு. மொண்டேகு ஜயவிக்கிரமா தாம் இதுபற்றிப் பரிசீலனை செய்வதாகத் தெரிவித்தார்.

பட்டதாரிகளுக்கு வேலை தேட தனிப்பிரிவு

கொழும்பு, சனி

தொழிற்கந்தோர்கள் பட்டதாரிகளுக்கு வேலைதேடித் தருவதற்கான தனியான பிரிவு அடுத்த வருடத்திலிருந்து நாட்டின் சகலபகுதிகளிலுமுள்ள தொழிற்கந்தோர்களிலும் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

வேலையற்றிருக்கும் பட்டதாரிகளுக்கு தனியார் ஸ்தாபனங்களிலும் வேலைதேடித் தர இந்த தனிப்பிரிவு உதவும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யு. என். பி. மேயர் மீது அவநம்பிக்கை பிரேரணை

கொழும்பு, சனி

கண்டி மாநகரசபையில் இப்போது பெரும்பான்மைபலம் பெற்றிருக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் மாநகரசபை நிர்வாகத்தைக் கைப்பற்றுவதற்காக கண்டிமேயர் சேர் பெனட் சொய்சாமீதும் உதவிமேயர்மீதும் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவதற்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு 12 அங்கத்தவர்களும் யு. என். பிக்கு 10 அங்கத்தவர்களும் சுயேச்சையாளர் ஒருவரும் அங்கம் வகிக்

[8-ம் பக்கம் பார்க்க]

அண்ணா அடுத்தவாரம் நாடுதிரும்புகிறார்

சென்னை, ஒக். 26

அமெரிக்காவில் தற்போது தங்கியுள்ள தமிழக முதல் மந்திரி திரு. சி. என். அண்ணாதுரை இன்னும் சில தினங்களில் தமிழகம் வந்துசேருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்காவிலிருந்து சென்னைக்குக் கிடைத்துள்ள தகவலின்படி, திரு. அண்ணாதுரையின் உடல் நிலையை நேற்றுமுன்தினம் அவருக்கு சத்திரசிகிச்சைசெய்த அமெரிக்க டாக்டர் திரு. மில்லர் பரிசோதித்துப் பார்த்ததாகவும், அது திருப்திகரமாக இருப்பதாக அறிவித்ததாகவும் கூறப்படுகிறது.

பெரும்பாலும் திங்கட்கிழமையன்று திரு. அண்ணாதுரை நியூயோர்க்கை விட்டுப்புறப்படுவாரென்று அறிவிக்கப்படுகிறது. வழியில், அவர் இரண்டொரு தினம் லண்டனில் தங்கியிருந்துவிட்டு அடுத்த மாதம் 2-ம் திகதி சென்னை வந்து சேருவார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இ. போ. ச. பஸ் விபத்தில் 40 பேர் படுகாயம்

கொழும்பு, சனி

மாத்தளைக்கு சமீபத்திலுள்ள அலவத்துக்கொடை எனுமிடத்தில் இன்று காலை 9-15 மணியளவில் நடைபெற்ற இ.போ.ச.பஸ்விபத்தில் 40 பேர் படுகாயங்களுக்குள்ளாகி கண்டி, மாத்தளை ஆஸ்பத்திரிகளில் இவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த பஸ் மாத்தளையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கையில் ஒரு வளைவில் திரும்புகையில் பாதையிலிருந்து வழுவி புறமாகப் பள்ளத்தில் சரிந்து விழுந்ததாலேயே இதில் பிரயாணம் செய்துகொண்டிருந்த சுமார் 70 பிரயாணிகளில் 40 பேர் படுகாயமுற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு தேயிலைத் தோட்டத்தில் நடைபெற்ற இவ்விபத்தில் பஸ் சாரதியும் கண்டக்டரும் எதுவித சேதமுமின்றித் தப்பிவிட்டார்கள்.

வண்டிச்சாரதி மாண்டார்

கொழும்பு, சனி

மாத்தளையில் இன்று இ. போ. ச. பஸ் ஒன்றும் மாட்டு வண்டி ஒன்றும் மோதி விபத்துக்குள்ளாகியபோது வண்டியின் சாரதி ஸ்தலத்திலேயே மாண்டார்.

மாவை ஆலயத்தில்...

நல்லூர், சனி

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்குள் காப்புக்கட்டியவர்களைத் தவிர வேறு எவரும் ஆலயத்துக்குள் செல்லமுடியாது பக்தர்கள் யாவரும் வெளியே நின்று சுவாமிதரிசனம் செய்கிறார்கள். சுவாமி தூக்கிக் கொண்டு வெளியே வருவதற்கும் குறிப்பிட்ட பக்தர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். ஆலயத்தைச் சுற்றி பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில்

உணவு உற்பத்தியை தீவிரப்படுத்த ஏற்பாடு

உடுவில், சனி

தற்போது ஆரம்பமாகி இருக்கும் பெரும்போக காலத்தில் உணவுற்பத்தி இயக்கத்தினை தீவிரப்படுத்த உணவுற்பத்தி இலாகா முடிவு செய்துள்ளது. விவசாய மக்களிடையே உள்ள கஷ்டநஷ்டங்களை விசாரித்தறியவும் பசளை வகைகளை பரந்த அடிப்படையில் விநியோகம் செய்யவும் திட்டமிட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் எல்லாக் காரியாதிகாரிப் பிரிவுகளிலும் இதற்கான ஆலோசனைக் கூட்டங்களையும் பிரசாரக் கூட்டங்களையும் நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன

காரியாதிகாரி பிரிவுகளில் நடைபெறும் இக்கூட்டங்களில் யாழ்ப்பாண மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசம்பிள்ளை சமூகம் கொடுத்து ''இலக்கு ஒக்கர் விபரங்களை'' விளக்கி விவசாயமக்களிடையே காணப்படுகின்ற கஷ்டங்களையும் தேவைகளையும் ஆராய்ந்து அறிவார். இந்த ஆலோசனைக் கூட்டம் முதலில் பருத்தித்துறைக் காரியாதிகாரி பிரிவில் நடைபெற இருக்கிறது.

இதனைத் தொடர்ந்து சாவகச்சேரி, சங்கானை, ஊர்காவற்றுறை, கோப்பாய், தெல்லிப்பழை முதலிய இடங்களிலும் இக்கூட்டங்கள் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

பசளை விநியோகத்தைப் பொறுத்தமட்டில் நெற்பயிருக்கும் ஏனைய தோட்டங்களில் செய்யப்படும் உபஉணவுப் பயிர்களுக்கும் வேண்டிய பசளை வகைகளை அவற்றைப் பயிரிடும் அனைவருக்கும் இலகுவில் விநியோகிக்கக்கூடியதாக பரந்தன், கிளிநொச்சி, புத்தூர் ஆகிய இடங்களில் அமைந்திருக்கும் பசளைக் கிடங்கில் சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்றது.

இப்பசளை வகைகளை சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு கொடுப்பதோடு தனிப்பட்ட முதலாளிகள் மூலமும் கொடுப்பதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

பசளைகள் நூற்றுக்கு ஐம்பது சத விகிதம் மானியமாக அனைவருக்கும் கொடுக்கப்படுமென அறியப்படுகின்றது.

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
ஜெமினி— சரோஜாதேவி
நடித்த
பெண் என்றால் பெண்

மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30
போயா, பிரிபோயா 2-30
சிவாஜி- சாவித்திரி
நடித்த
நவராத்திரி

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர், ஜெயலலிதா
நடித்த
காவல்காரன்

MANOHARA
JAFFNA
Daily at 4-45, 7&9-45p.m.
Clint Eastwood
Marianne Koch
in
Fistful of Dollars
[scope /color]

3-வது வாரம்
கிங்ஸ்லி பிளாஸா மைலன்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (கைடுநகர்)
★ எம். ஜி. ஆர். - ★ சரோஜாதேவி
அசோகன், நம்பியார், சந்திரபாபு, தங்கவேலு
இன்னும் பலர் நடித்த
ஆர். ஆர். பிக்சர்ஸ்



பறக்கும் பாவை

(ஈஸ்ட்மென் கலர்)

91-வது தினம்
லிடோ (பொரளை) ராஜ் (நீர்கொழும்பு)
ராஜ்கபூர் — வைஜயந்திமாலா
நடித்த
சங்கம்
(டெக்னிக்கலர்)

தேவை

ஓர் புதியஸ்தாபனத்திற்கு மோட்டார் உதிரிப் பாகங்கள் விற்பனையில் அனுபவமும் நம்பிக்கையுமுடைய விற்பனையாளர் ஒருவர் டிசம்பர் மாதம்முதல் வேலைக்குத்தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் கீழ்க்கண்ட விலாசத்திற்கு சொந்தக் கையெழுத்து விண்ணப்பத்துடன் கடித மூலம் தொடர்பு கொள்ளவும். S. மகேந்திரன், 33, 2-வது குறுக்குவீதி, நல்லூர். 294

விற்பனைக்கு

குறண்டிக் T. K. 24 மொடல் 4 றக்ரேப் றெக்கோடர், புத்தம் புதியது, விற்பனைக்குண்டு. சபாரத்தினம், 9/6 பாலகுவம. றோட்டு கொய்யாத்தோட்டம். 296

இணுவில்
ஸ்ரீ காலிஸ்கன்
தினசரி 6-30, 9-30
ஜெமினி - பத்மினி
நடித்த
சித்தி

இன்றைய பலன்

27-10-68
ஐப்பசி 11 உ
ஞாயிற்றுக் கிழமை

திதி- ஷஷ்டிபகல் 2-20 மேல் ஸப்தமி.

நக்ஷத்திரம்- பூராடம் இரவு 9-36 மேல் உத்தராடம்.

ராகுகாலம் - 4-32—6-02.

சுபநேரம் - 9-02 — 10-32.

இன்று பிறந்தவர்களுக்கு — புதிருக்குப்பின் புதிர் உங்கள் வாழ்க்கையைச் சிக்கலாக்கக்கூடும். எனினும் துணிவே துணை பெறக் கொண்டால் வாழ்க்கை அனுபவங்கள் மிகவும் குதூகலமுடையனவாக இருக்கும். தூரத்திச் செய்தியொன்று தன்மனத்தைத் தரலாம். சிலருக்கு எதிர்பாராத வரவுகளுக்கும் இடம் உண்டு. குடும்பத்தில் பொறுமையைக் கடைப் பிடிக்கவும். பெண்கள் வாழ்க்கையில் மிகவும் திடமாக நடந்து கொள்ளவேண்டும்.

மேஷம்- கற்றதால் பயன் கடவுள்நம்பிக்கை.

ரிஷபம்- துஷ்டர் உறவு, தூரத்துச்செய்தி.

மிதுனம்- காதல்செய், கவலைகள் பறக்கும்.

கடகம்- கண்துடைப்பு வேலை, கவனம்வேண்டும்.

சிம்மம்- முதியவர் நட்பு முன்னேற்றநிலை.

கன்னி- உழைப்பின் பயன், உற்சாகமிகுதி.

துலாம்- பணந்தரும் பயணம், பழைய நினைவுகள்.

விருச்சிகம்- மந்தநிலை மறதிக்குணம்.

தனுசு- நலிவுக்கு இடமுண்டு, நாவடக்கம் நன்று.

மகரம்- வாக்குச் சித்தி, வாகனநலன்.

கும்பம்- ஏக்கம் தாக்கும், தூக்கமும் கெடும்.

மீனம்- அறிவுக்கு விருந்து, ஆராய்ச்சியில் ஆர்வம்.

— சோதிடக் கலாநிதி —
திருமலை வேலுப்பிள்ளை

யாழ்ப்பாணம் மாநகரசபை

கேள்வி விளம்பரம்

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைகளுக்குள் இருபத்திரெண்டு வீடுகளடங்கிய பதினொரு கட்டிடங்களை நிருவுவதற்கான கேள்விப்பத்திரங்கள், நவம்பர், 15, 1968 காலை 10 மணிவரை, யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. மாநகரசபை ஆணையாளர் அலுவலகத்தில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில், நவம்பர் 15, 1968 முற்பகல் 11 மணிக்குக் கேள்விப்பத்திரகாரர் சமூகமளிக்க அனுமதிக்கப்படுவர்.

3. கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக ரூபா 200/-ம், கேள்விப்பத்திர விண்ணப்பப் பத்திரப்பணமாகத் திருப்பித் தரப்படாத ரூபா 25/-ம் கட்டி, யாழ்ப்பாணம் மாநகரசபை வேலை எஞ்ஜினியரிடம் நவம்பர் 8, 1968 நண்பகல் 12 மணிவரை விண்ணப்பத்தின் பேரில் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்பத்திரங்களிலேயே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டும். கேள்விப் பத்திரத்தைப்பெறும் கேள்விப்பத்திரக்காரர் தேவைப்படும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதும், கேள்விப்பத்திரக் கட்டுப் பணமாகிய ரூபா 200/- திருப்பி ஒப்படைக்கப்படும்.

4. எல்லாக் கேள்விப்பத்திரங்களும் பிரதிசெய்யப்பட்டு, சீல் வைத்து அனுப்பப்படவேண்டும். கேள்விப்பத்திரங்களடங்கிய கூடு உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வீடுகள் கட்டுவதற்கான கேள்விப்பத்திரம் — வீட்டுத்திட்டம், யாழ்ப்பாணம்'' என்று எழுதப்பட்டிருக்கவேண்டும்.

5. பொதுவாராமத்து இலாகாவுடன் ரூபா 100,000/-க்குக் குறையாத தொகைக்குப் பதிவுசெய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு பதிவுக்கான அத்தாட்சி சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், கேள்விப்பத்திர விண்ணப்பப் பத்திரங்கள் அளிக்கப்படும்.

6. மற்றும் விபரங்கள், வேலை எஞ்ஜினியரிடம் விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பம்- கே. பேரம்பலம்
மாநகரசபை ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
ஒக்டோபர் 19, 1968. 1033

ஓம்
ஸ்ரீராம ஜெயம்

திருப்பதி

ஓம் ஸ்ரீ வெங்கடாசலபதி நம!
ஓம் ஸ்ரீ வெங்கடாசலபதி நம!
ஓம் ஸ்ரீ வெங்கடாசலபதி நம!

த. கணபதிப்பிள்ளை தம்பதிகள்,
வீ. மகாலிங்கமும்.
மீசாலை தெற்கு. 761

தேவை

வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம்,
111, பிரதானவீதி,
யாழ்ப்பாணம்.

மேற்படி சமாசத்திற்கு 25,000 இதர சாக்குகள் தேவை. 29-10-68 பகல் 12 மணிக்கு முன்னர் விண்ணப்பப்பத்திரத்தை நிபந்தனையுடன் பெற்றுச் செல்லவும்.

1031 காரியதரிசி.

இளவாலைக்கு மின்சாரம்

பண்டத்தரிப்பு, சனி

இளவாலைப் பகுதிக்கு மிக விரைவில் மின்சாரம் வழங்கப்படவிருக்கிறது. இதற்கான ஆரம்பவேலையாக வீதிகளிலுள்ள தடைகள் அகற்றப்பட்டு மின்சாரக்கம்பங்கள் கொண்டுவந்து சேர்க்கப்பட்டுள்ளன. அடுத்த வருடத்தில் வேலைகள் பூர்த்தியாகுமென நம்பப்படுகிறது.

இங்கிலாந்தில் தயாரிக்கப்பெற்ற
6 வோல்ட் - 12 வோல்ட்
மில்லர் டைனமோக்கள்
குறைந்த விலையில் விற்பனைக்குண்டு.
நியூரோன் எலெக்ரிக்கல்ஸ்
141-143, ஸ்ரான்லி ரோட் — யாழ்ப்பாணம்.
போன்: 7016

சிங்கம் மார்க்
LION BRAND SANDANADI THYLAM
சிங்கமார்க்
சந்தனாதித்தைலம்
வாங்கி உபயோகியுங்கள், எங்கும் கிடைக்கும்.
போன்
தயாரிப்பாளர்கள்:-
ப. மு. ஃசன்ஸ்
88. செட்டியார்தெரு. கொழும்பு 11

குண்டு வீச்சு நிறுத்தலுக்காக

அமெரிக்க நிபந்தனைகளை வட வியட்னும் ஏற்கவில்லை: ஹனேய் ரேடியோ விளக்கம்

ஹனோய் ஒக் 26

அமெரிக்கா வடவியட்னும் மீதான குண்டுவீச்சை நிறுத்துவதற்கு பதிலாக அது விதித்துள்ள சில நிபந்தனைகளை வட வியட்னும் ஏற்றுக் கொண்டுள்ளதென்ற செய்தியை ஹனோய் ரேடியோ மறுத்துள்ளது.

இந்தச் செய்தியைவெறும் பிரசாரக் குண்டு என்று வட வியட்னும் அறிவித்துள்ளது.

வடவியட்னுமில் சமாதானத்தை ஏற்படுத்தத் தாம் பெருமுயற்சி எடுத்து வருவதாக அமெரிக்க ஜனாதிபதி திரு ஜோன்சன் தெரிவித்திருந்ததை ஹனோய் ரேடியோ கபடத்தனமானது என்று கண்டித்துள்ளது.

வட வியட்னுமின் மீதான குண்டுவீச்சை எவ்வித நிபந்தனையுமின்றி அமெரிக்கா நிறுத்தினாலன்றி வியட்னுமில் சமாதானத்தை ஏற்படுத்துவதில் அமெரிக்காவுக்குள்ள ஆர்வம் உண்மையானது என்று நம்பமுடியாது என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

குண்டு வீச்சை அமெரிக்கா நிறுத்துமென்கிறார் லாவோஸ் பிரதமர்

நாம்பென், ஒக். 26

வடவியட்னும் மீதான குண்டுவீச்சைத் தான் நிறுத்தப்போவதாக அமெரிக்கா லாவோஸ் அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளதாக லாவோஸ் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனால் குண்டுவீச்சு எப்போது நிறுத்தப்படுமென்பதற்கான திட்டவட்டமான திகதியை மட்டும் அமெரிக்கா குறிப்பிடவில்லையெனவும் அச் செய்திகள் கூறுகின்றன.

அமெரிக்கா குண்டுவீச்சை நிறுத்துவது பற்றிக் கூறியிருப்பதென்ற தகவலை லாவோஸ் பிரதமர் திரு சுவன்னபூமா இங்கு வெளியிட்டார்.

முன்னதாக திரு பூமா லாவோஸிலுள்ள அமெரிக்கத் தூதுவரைச் சந்தித்துப் பேசியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தென். வியட்னுமிலிருந்து

மூன்றில் ஒரு பங்கு துருப்புகளை வட வியட்னும் வாபஸ்பெற்றது

அமெரிக்க பாதுகாப்பு மந்திரி தகவல்

வாஷிங்டன், ஒக். 26

தென் வியட்னுமிலுள்ள வட வியட்னும் துருப்புகளில் மூன்றில் ஒரு பகுதியை, அதாவது ஏறத்தாழ 30.000 தொடக்கம் 40,000 வரையிலான துருப்புகளை வட வியட்னும் அண்மைக்காலத்தில் வெளியேற்றியுள்ளதாக அமெரிக்க பாதுகாப்பு மந்திரி திரு கிளிபோர்ட் அறிவித்துள்ளார்.

இதற்குப் பிறகும் தென் வியட்னுமில் இன்னும் 80,000 வடவியட்னும் துருப்புகள் நிலை கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

வடவியட்னும் தனது துருப்புகளில் ஒரு பகுதியை இவ்வாறு வாபஸ் பெற்றிருப்பதன் முக்கியத்துவம் பற்றி இப்போது குறிப்பிடுவது காலத்துக்கு முந்தியதாக அமையுமென்று திரு. கிளிபோர்ட் கூறினார்.

பாரிஸ் பேச்சு வார்த்தைகள் நடக்கும் காலகட்டத்தில் வியட்னும் போரில் வட வியட்னும் மீதான அமெரிக்க இராணுவ நெருக்கத்தை எவ்வகையிலும் குறைப்பதில்லையென்று அமெரிக்க ஜனாதிபதி திரு ஜோன்ஸன் பணித்திருப்பதாகவும் பாதுகாப்பு மந்திரி திரு கிளிபோர்ட் தெரிவித்தார்.

பிரிட்டனில்

மாபெரும் வியட்னும் போர் எதிர்ப்பியக்கத்துக்கு ஆயத்தம்

லண்டன் பொருளாதாரக் கல்லூரி கட்டிடம் மாணவர் கைகளில்

லண்டன் ஒக்.26

லண்டனிலுள்ள பிரபல பொருளாதாரக்கல்லூரியை மாணவர்கள் தம்வசப்படுத்தியுள்ளனர். முன்னதாக அங்கு கூடியிருந்த மாணவர்களுடன் நேற்று மேலும் ஆயிரம் மாணவர்கள் போய்ச்சேர்ந்துகொண்டனர்.

நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கும் மாபெரும் வியட்னும் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடந்து முடியும்வரை கல்லூரிக் கட்டிடத்தை விட்டு விலகுவதில்லையென மாணவர்கள் உறுதி கொண்டுள்ளனர்.

இந்த வியட்னும் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது லண்டன் பொருளாதாரக் கல்லூரியை ஒரு புகலிடமாகவும் முதல் உதவி நிலையமாகவும் பயன்படுத்த மாணவர்கள் உத்தேசித்துள்ளனர்.

மாணவர்கள் கல்லூரியைப் பிடித்து வைத்துள்ளது பற்றிக் கல்லூரி அதிபர் குறிப்பிடுகையில் மாணவர்களின் செயல் கண்டிக்கத்தக்க நடவடிக்கையொன்றென்றாலும் அவர்களை அப்புறப்படுத்துவதில் பலாத்காரம் பிரயோகிக்கப்படுவதைத் தாம் எதிர்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.

கல்லூரிக் கட்டிடத்தை விட்டு வெளியேறுமாறு கன்டபெரி அதிமேற்றிராணியார் மாணவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். லண்டனில் நடத்தப்படும் பலாத்காரம் வியட்னுமில் நடக்கும் பலாத்காரத்தை நிறுத்திவிட முடியாதென்று அவர் தமது வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா - பாகிஸ்தான் யாத்திரிகர் பிரச்னை

புதுடில்லி, ஒக். 26

பாகிஸ்தானிடம் ஒப்படைத்துள்ள குறிப்பொன்றில், பாகிஸ்தான் செல்லும் இந்திய யாத்திரிகர்களுக்குச் சகல வசதிகளையும் அளிப்பதென்ற உறுதிமொழியைக் காப்பாற்றுமாறு பாகிஸ்தானை இந்தியா கேட்டுள்ளது.

இந்தியா வரும் பாகிஸ்தான் யாத்திரிகர்களுக்கு எவ்வித கட்டுப்பாட்டையும் இந்தியா விதித்திருக்காதபோது, பாகிஸ்தான் செல்லும் இந்திய யாத்திரிகர்களைத் தேர்வுமூலம் அனுமதித்துப் பாகிஸ்தான் இக்கட்டுப்பாடுகளை விதித்துள்ளதையிட்டு இந்தியா கவலை தெரிவித்துள்ளது.

இந்தோனேஷிய கப்பல்கள் சிங்கப்பூர் செல்லா

ஜக்கார்த்தா, ஒக். 29

முன்னர் அறிவித்திருந்தபடி, இந்தோனேஷிய தேசிய கப்பல் கட்டுத்தாபனம், தனது கப்பல்களைச் சிங்கப்பூருக்கு அனுப்புவதை நிறுத்திக்கொண்டுள்ளது.

நான்கு மடங்கு அணு ஆயுதம்

வாஷிங்டன், ஒக். 26

ரஷ்யாவைவிட நான்கு மடங்கு அதிகமான அளவில் அணு ஆயுதங்களை அமெரிக்கா வைத்துள்ளதாக அமெரிக்க பாதுகாப்பு மந்திரி திரு. கிளிபோர்ட் அறிவித்துள்ளார்.

அத்துடன், உலகிலேயே மிக வேகமாக இயங்கக் கூடிய புதிய ரக அணு சக்தி நீர்மூழ்கிக் கப்பலொன்றையும் அமெரிக்கா தயாரிக்கப்போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

42 பிரயாணிகளைக் கொண்ட அமெரிக்க விமானம் நொறுங்கியது

வாஷிங்டன், ஒக். 26

அமெரிக்காவிலுள்ள நியூ ஹாம்ப்ஷயர் மலையிலே 42 பிரயாணிகளைக்கொண்ட அமெரிக்க விமானமொன்று மோதி நொறுங்கி விழுந்துவிட்டது.

வட கிழக்கு ஏர் லைன்ஸைச் சேர்ந்த இவ்விமானம், பொஸ்டனிலிருந்து புறப்பட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

விமானத்திலிருந்த 42 பிரயாணிகளில் யாராவது தப்பியிருக்கிறார்களா என்பது பற்றி இதுவரை எதுவும் உறுதியாகக் கூறமுடியவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செக். நாட்டிலிருந்து மேலும் சோவியத் துருப்புகள் வெளியேற்றம்

மாஸ்கோ ஒப்பந்தத்துக்கு டுப்ஜெக் ஆதரவு

பிராக், ஒக். 26

பிராக்கிலிருந்து வரும் செய்திகள், செக்கோஸ்லவாக்கியாவிலிருந்து மேலும் பல சோவியத் துருப்புப்பிரிவுகள் வெளியேறுவதாகத் தெரிவிக்கின்றன. மேற்கு ஜேர்மனி எல்லையோரமுள்ள சோவியத் படைப்பிரிவுகளே வெளியேறி வருவதாகக் கூறப்பட்டுள்ளது.

கிழக்கு ஜேர்மனி, போலந்து, பல்கேரியா, ஹங்கேரி நாட்டுத்துருப்புகள் ஏற்கனவே செக். நாட்டிலிருந்து தமது துருப்புகளை வெளியேற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

டுப்ஜெக் பேச்சு

செக். கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரான திரு. டுப்ஜெக், சோவியத் படைப்பிரிவுகள் சிலவற்றைச் செக். நாட்டில் காலவரையறையின்றி நிலைகொள்வதற்கு அனுமதிக்கும் மாஸ்கோ ஒப்பந்தத்தை ஆதரித்துப்பேசியுள்ளார்.

தனது சீர்திருத்தப் பாதையில் நாடு முன்னேறுவதானால், செக். ரஷ்ய உறவு விருத்தி அவசியமாகின்றது என்று திரு. டுப்ஜெக் கூறியிருக்கிறார்.

(7-ம் பக்கம் பார்க்க)

செக். பிரவேசத்தை எதிர்த்த மூவருக்கு கி. பேர்லினில் சிறை

கி. பேர்லின், ஒக். 26

செக்கோஸ்லவாக்கியாவில் வார்ஸோ நாடுகள் துருப்புகளை மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளை எதிர்த்த குற்றச்சாட்டில் இரு இளம் பெண்களும் ஒரு வாலிபரும் கிழக்கு பேர்லினில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளனர்.

வாலிபர் கிழக்கு ஜேர்மனி கலாச்சார விவகார மந்திரியின் மகன் எனச் சொல்லப்படுகிறது.

மூவருக்கும் முறையே இரண்டு வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனிடம் வலியுறுத்தல்

பெரும்பான்மை ஆட்சிக்கு வழிவகுக்காது ரொடீஷிய சுதந்திரமளிக்கக் கூடாது

ஐ. நா. பொதுச்சபையில் நிறைவேறிய தீர்மானம்

நியூயோர்க், ஒக். 26

பெரும்பான்மை ஆட்சிக்குக் கீழல்லாமல் மற்றும்படி ரொடீஷியாவுக்குச் சுதந்திரம் அளிக்கப்படக் கூடாது என்று பிரிட்டனை வலியுறுத்தும் தீர்மானமென்று ஐ. நா. பொதுச்சபையில் அதிகப்படி வாக்குகளினால் நேற்று நிறைவேறியது.

ஐ. நா. உத்தரவாதக் கமிட்டியினால் பொதுச்சபை வாக்கெடுப்புக்கு அனுப்பப்பட்ட இத்தீர்மானத்துக்கு ஆதரவாக 92 நாடுகளும், எதிராக 2 நாடுகளும் வாக்களித்தன. எதிர்த்து வாக்களித்த நாடுகள் இரண்டும், தென்னாபிரிக்காவும் போர்ச்சுக்கலுமாகும். பிரிட்டன் உட்பட 17 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

பிரிட்டிஷ் பிரதிநிதி

பிரிட்டிஷ் பிரதிநிதி கரடன் பிரபு பேசுகையில் தீர்மானம் பிரிட்டிஷ் சுயாதிபத்தியம், பிரிட்டிஷ் பார்லிமெண்டின் அதிகாரம் இவற்றைக் கட்டுப்படுத்துவதால் பிரிட்டன் அத்தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூறினார்.

உகாண்டா வெளியுறவு மந்திரி

[illegible] உகாண்டா வெளியுறவு மந்திரி, அண்மையில் பிரிட்டனுக்கும் ரொடீஷியாவுக்கும் மிடையே ஜிப்ரால்டரில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது, ரொடீஷியாவுக்கு பிரிட்டன் சில சலுகைகளை அளித்துள்ளதாகக் குற்றஞ்சாட்டினார்.

ரொடீஷியா மீது பலாத்காரத்தை பிரிட்டன் பிரயோகிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது என்றும் அவர் கூறினார்.

கொங்கோ பிரதிநிதி

கொங்கோ-பிரஸவில் அரசாங்கத்தின் பிரதிநிதி பேசுகையில், ரொடீஷியாவுக்கு எதிராகச் சபை நிறைவேற்றிய பொருளாதாரத்தடைவிதிகள், தென்னாபிரிக்காவும் போர்ச்சுகலும் விலத்தப்பட்டதால், பயனற்றுப் போய்விட்டதாகத் தெரிவித்தார்.

போர்ச்சுகலுக்கு வட அத்லாந்திக் ஒப்பந்த இராணுவக் கூட்டு நாடுகள் அளித்துவரும் ஆதரவுக்கும் கொங்கோப் பிரதிநிதி கண்டனம் தெரிவித்தார்.

நைஜீரியப் பிரதிநிதி

நைஜீரியப் பிரதிநிதி பேசுகையில், தென்னாபிரிக்காவின் இனவொதுக்கல் கொள்கை, அண்டையிலுள்ள தென் மேற்கு ஆபிரிக்கா, ரொடீஷியா, போர்த்துகேய அங்கோலா மற்றும் பல பகுதிகளுக்கும் பரவி வருவதாகக் கூறினார். தனக்கு அண்மையிலுள்ள ஆபிரிக்க நாடுகளில் ஒரு செல்வாக்கு மண்டலத்தை நிறுவத் தென்னாபிரிக்கா முயற்சித்து வருவதாகவும் அவர் குற்றஞ் சாட்டினார்.

மணிவாக்கு

இன்னல்களிலிருந்தும் வேதனையிலிருந்தும் தான் நாடுகள் பிறக்கின்றன. —மகாத்மா காந்தி

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram "EELANADU" Jaffna.
Post Box- 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் கீலகவருஷம் ஐப்பசிமாதம் 11-ந் திகதி
[27-10-68]

போலீஸ் மாற்றம்

போலீஸ் அதிகாரிகளை மாற்றுவது சம்பந்தமாக தீவெங்கும் ஒரேவிதமான கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டியதே முறை. ஆனால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஒரு போலீஸ் அதிகாரியை மூன்று வருடங்களுக்கு மேல் வைத்திருப்பதில்லை என்றும், மற்ற மாகாணங்களில் ஐந்து வருடங்கள்வரை அதிகாரிகள் நீடித்திருக்கவும் போலீஸ் தலைமைப்பீடம் வேற்றுமைக் கொள்கையை மேற்கொண்டிருப்பதாக ஒரு செய்தி தெரிவிக்கின்றது. இது உண்மையானால் வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரை ஏன் இவ்வித பாரபட்சமான முறையைக் கைக்கொள்ள வேண்டுமென்பது தெரியவில்லை.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குத் தமிழ் தெரிந்த போலீஸ் அதிகாரிகளையே நியமிக்க வேண்டுமென்ற கோரிக்கையைப் போலீஸ் தலைமைப்பீடம் ஒப்பவில்லை என்று அதே செய்தி தெரிவிக்கின்றது. மேற்குறித்த இரு மாகாணங்களிலும் பொதுமக்கள் பேசும் மொழி தமிழேயாகும். இவ்வித நிலையில், இங்கு சட்டத்தையும், அமைதியையும் பாதுகாக்கவேண்டிய அதிகாரிகளுக்குத் தமிழ் தெரியாதிருப்பின் அவர்கள் தங்களது அந்த முக்கிய கடமையை எப்படிச் சரிவர நிறைவேற்ற முடியும்?

பொதுமக்களின் ஒத்துழைப்பை பெற்றுத்தான் போலீஸார் குற்றங்களைத் தடுத்து, அமைதியை நிலைநாட்டமுடியும். பொதுமக்கள் பேசும் மொழி போலீஸாருக்குத் தெரியாவிடில் அவர்கள் எவ்விதம் பொதுமக்களின் நம்பிக்கையையும், அபிமானத்தையும், ஒத்துழைப்பையும் பெறமுடியுமென்று கேட்கின்றோம். ஒரு சில பெரிய அதிகாரிகளுக்கு மட்டும் பொதுமக்களின் மொழி தெரிந்தால் போதாது. இங்கு கடமை பார்க்கவரும் ஒவ்வொரு பொலிசாருக்கும் தமிழ் தெரிந்திருக்க வேண்டும். தமிழ் தெரியாத பொலிசாரை இப்பகுதிகளுக்கு அனுப்புவது இங்கு பொதுமக்களுக்கு உதவியாக இருப்பதற்குப் பதில் உபத்திரவமாகவே முடியும். அது மட்டுமல்ல. இப்பகுதியில் குற்றங்கள் அதிகரிப்பதுடன், சம்பந்தப்பட்ட பொலிசாருக்கே அங்கு வருவது மகிழ்ச்சியளிக்க முடியாது. இதற்குமாறாக இதை ஒரு தண்டனையாகவே அவர்கள் கருதக்கூடும்.

தமிழ்ப்பகுதியிலுள்ள பொதுமக்கள் பயமின்றி அமைதியாக வாழவேண்டுமென்ற எண்ணம் அரசாங்கத்துக்கு இருக்குமாயின், தமிழ் மொழி தெரிந்த பொலிஸ் அதிகாரிகளையே இங்கு அனுப்ப வேண்டும். அவர்கள் தமிழராக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. இங்குள்ள அரசியல் தலைவர்களிடையே வேறெந்த கருத்து வேற்றுமைகள் இருப்பினும் இந்த ஒரு விஷயத்தில் அபிப்பிராய பேதம் இருக்க முடியாது. பிரிட்டன் முதலிய நாடுகளில் ஒவ்வொரு 'கவுண்டி கவுன்ஸில்' என்ற ஸ்தலஸ்தாபனத்துக்கும், பொலிஸ் காவல் அதிகாரம் உண்டு. தமக்கு வேண்டிய பொலிசாரை தாங்களே நியமித்துக் கொள்ளக் கூடியதாக இருக்கிறது. அம்முறையை இலங்கையில் பின்பற்றுமளவு போனாலும் தமிழ்ப்பகுதிகளின் அமைதியைப் பாதுகாக்க தமிழ் தெரிந்த பொலிசாரையே நியமிக்க வேண்டுமென்று இப்பகுதியிலுள்ள எல்லாக்கட்சி எம். பி. மார்களும், தலைவர்களும் வற்புறுத்திக் கேட்க வேண்டும். அவ்வித நியாயமான கோரிக்கையை அரசாங்கம், நாட்டின் நலனை முன்னிட்டாவது சுலபமாக மறுக்க முடியாது.

தயவு எதற்கு?

அபிவிருத்தியடைந்து வரும் ஆசிய நாடுகளின் ஏற்றுமதி வருமானத்தில் வீழ்ச்சி ஏற்படுவதைத் தடுப்பதற்கு அபிவிருத்தியடைந்த - செல்வமிகுந்த நாடுகளின் நல்லெண்ணமும் ஒத்துழைப்பும் வேண்டுமென்று இலங்கை கேட்டிருக்கிறது. கோரிக்கை நியாயமானதுதான். ஆனால் செல்வம் இல்லாத நாடுகளைப் பயன்படுத்தியே செல்வந்த நாடுகளாக வந்துள்ள நாடுகள் மேலும் மேலும் அதே வழியைத்தான் பின்பற்ற முனைகின்றன. இந்நிலையில் இலங்கையின் கோரிக்கை செல்வந்த நாடுகளின் செவிகளில் ஏறுமா!

இல்லாதோருக்கும் இருப்போருக்கும் உள்ள இடைவெளியை நீக்குவதற்காக சமீபத்தில் புதுடில்லியில் நீண்ட நாளாக நடைபெற்ற ஐ. நா. ஆசியப்பிராந்திய பொருளாதார விருத்தி மகாநாடுகூட எந்தவித பலனும் தரவில்லை. இது வசதியடைந்த நாடுகளின் மனப்பான்மையைத் தெளிவாக்கிவிட்டது.

சியோலில் நடைபெறும் கொழும்புத் திட்டநாடுகளின் 19-வது வருடாந்த மகாநாட்டில் இலங்கைப் பிரதிநிதியாகக் கலந்துகொண்ட ஜப்பானிலுள்ள இலங்கைத் தூதர் திரு. எச். ஈ. தென்னக்கூன் அபிவிருத்தியடைந்துவரும் ஆசிய நாடுகளின் உற்பத்திப் பெருக்க முயற்சி பற்றியும் உற்பத்திசெய்த பொருள்களை வெளிநாடுகளில் விற்பனை செய்து வருமானம் பெறுவதற்கு அபிவிருத்தியடைந்த நாடுகள் இடையூறாக இருப்பது பற்றியும் இலங்கையின் தேயிலை உற்பத்தியை உதாரணமாகவும் நல்ல முறையில் எடுத்துக்கூறி செல்வந்தநாடுகளின் நல்லெண்ணமும் ஒத்துழைப்பும் தேவையென்று உருக்கமாக வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அரசியலிலும் பொருளாதாரத்திலும் ஆசிய நாடுகள் தலைதூக்குவதை விரும்பாத செல்வந்த நாடுகள் இதற்கு மனமிளகினால் நல்லதுதான்.

ஆனாலும் அந்த நாடுகளின் தயவை எதிர்பார்த்திராமல் ஆசிய நாடுகள் தமக்குள் ஒற்றுமைப்பட்டு தமது உணவு, உடை மற்றும் தேவைகளைத் தாமே நிறைவேற்றிக்கொள்ளும் முறையில் உற்பத்தியிலும் உழைப்பிலும் ஈடுபட [illegible] டும்?

மகாவலிகங்கை பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டம்

9 லட்சம் ஏக்கர் நில
நீர்ப்பாசனம் கிடை

விவசாயம், மின்சாரம் இரண்டிலும்
எதிர்பார்க்கப்படும்வருமானம் ரூ. 140.5கோ

வீணாய்ப்போகும் மகாவலிகங்கையின் நீரைப் பயன்படுத்தி சுமார் 9,00,000 ஏக்கர் நிலத்துக்கு நீர்ப்பாசன வசதியளிக்கவும் 261.1 கோடி கே. டபிள்யு. எச். மின்சக்தியை உற்பத்தி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. நீர்ப்பாசனம் பெறும் நிலப்பரப்பில் 4,73,000 ஏக்கர் மகாவலிகங்கை பள்ளத்தாக்கிலும் மதுருஓயா பள்ளத்தாக்கிலும் இருக்கும். ஏனைய 4,27000 ஏக்கர் நிலமும் வடமத்தியமாகாணத்திலும் வட மாகாணத்திலும் இருக்கும்.

சுமார் 4,000 சதுரமைல் விஸ்தீரணமுள்ள நிலப்பரப்பிலிருந்து மகாவலி கங்கையும் அதன் கிளைகளும் நீர் வழிந்தோடுகிறது. இந்த நிலப்பரப்பு இலங்கையின் நிலப்பரப்பில் சுமார் ஆறிலொன்றாகும்.

இந்த நதி 6,000 அடிக்கு மேல் உயர்ந்த மலைப்பிரதேசத்தில் உற்பத்தியாகி சுமார் அறுபது லட்சம் ஏக்கர் அடி நீரை திருகோணமலைக் கடலில் கொண்டு சேர்க்கிறது. இதற்குமுன் உபயோகப் படுத்தப்படாத இந்த நீர் இப்பொழுது விவசாயத்திற்கும் நீர்—மின்சார திட்ட அபிவிருத்திக்கும் கிடைக்கக் கூடியதாக இருக்கிறது.

குறிப்பாக நீர்ப்பாசனம், நிலஅளவை, மின்சாரம் ஆகிய அரசாங்க முகவர்களின் உதவியுடன் ஐக்கிய நாட்டு அபிவிருத்தித் திட்ட விசேஷ நிதிக்குழு பரிசீலனை செய்ததற்கிணங்க மகாவலி கங்கைநீரைப் பயன்படுத்தி சுமார் 9,00,000 ஏக்கர் நிலப்பரப்புக்கு நீர்ப்பாசன வசதியளிக்கவும், 5,07,000 கிலோவாட் மின்சக்தியை நிறுவி 261.1 கோடி கே. டபிள்யு. எச். மின்சக்தியை உற்பத்திசெய்யவும் முடியுமென மதிப்பிடப்பட்டிருக்கின்றது. மேற்குறித்த 9,00,000 ஏக்கர்களில் 4,73,000 ஏக்கர் மகாவலிகங்கை பள்ளத்தாக்கிலும் மதுருஓயா பள்ளத்தாக்குப் பகுதியிலும் இருக்கும் ஏனைய 4,27,000 ஏக்கரும் வடமத்திய மாகாணத்திலும் வடமாகாணத்திலும் இருக்கும். இந்த மொத்த நிலப்பரப்பில் தற்சமயம் 2,46,000 ஏக்கர் பயிரிடப்பட்டிருக்கின்றது. ஆனால் வருடம் முழுவதும் சிக்கனமான விவசாயம் செய்வதற்குப்போதுமான நீர் விநியோக வாய்ப்பு இல்லை. இந்த மேலதிகமான 6,54,00 ஏக்கர் நிலம், இலங்கையிலுள்ள சகல பிரதான நீர்ப்பாசன திட்டங்களாலும் தற்சமயம் நீர்ப்பாசனமளிக்கப் படுவதைவிட ஒன்றரை மடங்கு அதிகமானதாகும். அத்துடன் பெரிய, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களால், நெல் விவசாயத்திற்குட்பட்ட மொத்த நிலப்பரப்பின் முக்கால் மடங்குக்குச் சமமானதாகவும் இருக்கும்.

பலதரப்பட்ட உற்பத்தி

நிலவளத்தையும் சுவாத்தியத்தையும் கருத்திற்கொண்டு நீர்ப்பாசன விவசாயத்தின்மூலம் ஆகக்கூடிய பயனையடையும்நோக்குடன் பலதரப்பட்ட பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ள இந்த யோசனைகளால் எதிர்பார்க்கப்படுகிறது. இக்குறிக்கோளை அடைவதற்கு, நெற்பயிர்களுக்குப்பதிலாக நிலக்கடலை, கௌண்டைக்கடலை, பருத்தி, காய்கறி முதலான வேண்டப்படும் இனங்களைப் பயிரிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. அத்தகைய பலதரப்பட்ட உற்பத்தியால் முதலீடு செய்யப்பட்ட மூலதனத்துக்கேற்றநல்லலாபம் கிடைக்கும். நீர்ப்பாசனம், வடிகால், மின்சாரம் ஆகியவைகளின் மொத்தச் செலவு 670 கோடி ரூபாவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தொகை அநேகமாக இந்நாட்டு மக்கள் அனைவரினதும் தற்போ

ஒரு வருட மொ
வருமானத்திற்குச் ச
தாகும் இதனால் வி
தின்மூலம் 133 கோ
வும் மின்சாரத்தின்
13.2 கோடி ரு
மொத்தம் 140.5
ரூபா இலாபம் கி
மென எதிர் பார்க்
டுள்ளது. இத்
1967-68-ம் நிதி வரு
இலங்கை அரசாங்க
வார்த்த இறைவரிப்
சதவீதத்திற்கு
தாகும்.

மாவை ஆலயப்பிரவேச வழக்கு

'சாதியைக் காரணமாகக்கொண்
தடுத்திருக்கிறார்'

சுந்தரலிங்கத்துக்கு அபராதம் விதித்து நீதிபதி தெரிவித்த விளக்கம்

(நேற்றைய தொடர்ச்சி)

எனவே தேசவழமைச் சட்டத்தின்படி சாதிக்குறைவு காரணமாக ஆலயத்தின் உட்பிரகாரத்திலும் செல்லக்கூடாதென விதிக்கப்பட்ட தடையை சமூகக் குறைபாடு ஒழிப்புச்சட்டம் ரத்துச்செய்துவிட்டதென்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். சின்னையா பள்ளர் இனத்தைச் சேர்ந்தவரென்பதாலும், அவரது சாதியினர் கோயிலின் உட்பிரகாரத்திலும் பிரவேசிக்க உரிமை இல்லையென்பதாலுமே தான் அவரைத் தடுத்ததாக எதிரி கூறியதை என்னால் ஏற்கமுடியவில்லை.

சமூகக் குறைபாடுகள் ஒழிப்புச்சட்டத்தின் 3-ம், 'பி' பிரிவு இலங்கை அரசியல் சட்டத்தின் 29-ம் 2-ம் 'டி' பிரிவுக்கு முரண்பட்டதெனவும் எதிர்தரப்பில் வாதிடப்பட்டது. அரசியல் சட்டத்தின் மேற்படி பிரிவின்படி நிர்வாகத்தினரின் அனுமதியின்றி எந்தச் சமய நிறுவனங்களினதும் நிர்வாக முறையை மாற்றியமைக்கும் எந்தச் சட்டத்தையும் பாராளுமன்றம் நிறைவேற்ற முடியாது. நான் இந்த வாதத்தை நன்கு பரிசீலனைசெய்தேன். இந்த வழக்கிற்கு அந்த வாதம் பொருந்தாது. சமூகக் குறைபாடுகள் ஒழிப்புச் சட்டம் எந்தச் சமய நிறுவனத்தினதும் நிர்வாக முறையை மாற்றியமைக்கும் நோக்கம் கொண்டதல்ல. இச்சட்டம் அரசியல் சட்டத்தின் 29-ம் 2-ம் 'டி' பிரிவுக்கு முரண்பட்டதல்லவென நான் தீர்ப்பளிக்கிறேன்.

சின்னையா ஆலயத்தினுள் நுழைந்தால் அதன் விளைவாக அங்கு ரத்தக்களரியும் கொலையும் நடைபெறலாமெனத் தான் அஞ்சியதாகவும் அதன் காரணமாகவே தான் சின்னையாவை ஆலயத்தினுள் நுழைய விடாது தடுத்ததாகவும் இதைத்தவிர தனது செயலுக்கு வேறு குற்றம் செய்யும் நோக்கம் கிடையாதென்றும் எதிரி கூறினார். அவரது சாட்சியத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். எதிரியின் பிரசன்னத்தினாலேயே கோயிலில் [illegible] பலாத்கார செயல்களுக்கு இடமளிக்கும் சூழ்நிலை தவிர்க்கப்பட்டதென எனக்குத் தோற்றுகிறது.

எதிரியின் இந்த விளக்கம் சின்னையாவின் ஆலயப்பிரவேசத்தை தடுத்ததின் நோக்கத்தையே உணர்த்துகிறது. அவரது நோக்கம் அவர்மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்களுக்கு பொருத்தமானதாக இல்லை. என்றாலும் தண்டனை சம்பந்தப்படி அதனைப் பரிசீலிக்கலாம். நீதிமன்றத்தில் சாட்சியமளித்த சின்னையாவும், கிருஷ்ணரும் அவர்கள் கோயிலின் உட்பிரவேசிக்கமுயன்றபோது எதிரி சின்னையாவின் மடியில் கையைவைத்துத் தள்ளியதாக கூறினார்கள். இதனை எதிரிமறுத்துள்ளார். சம்பவ தினம் சின்னையாவை தான்

தீண்டவில்லை யென
கூறியுள்ளார்.
பலாத்காரமாக
னும் பிரவேசிக்க
ரூர் என நான்
என
எனவே எதிரி
பிடித்துத்தள்ள
அவசியம் ஏற்பட
மில்லை.

எதிரி சாட்சிய
போது அவர்
காட்டிய உண்மை
மும், வெளிப்ப
தன்மையும் என்னை
தும் கவர்ந்தன.
சம்பவ தினத்தில்
கோயிலில் நடந்து
முறை எந்தவித
கத்தமாராகவும்
பிலும் நின்றார் எ
காட்டுகிறது. எதி
செயல்களைக்
நேர்மையாகவும்,
வடையாகவும்
கொண்டிருக்கிறார்
தவை சந்தர்ப்பத்
முக்கிய விஷய
அவர் உண்மையி
விலகியிருப்பார்
தான் நினைக்க நியா

எனவே இன்
ஆலயப்பிரவே
தடுத்தபொழுது
பலாத்காரம் பிர
வில்லையென்பதை
ஏற்றுக்கொள்
இருமதத்தவரா
னைய வழிபாடு
நோக்கத்துடன்
புரம் கந்தசுவாமி
லின் உட்பிரகா
பிரவேசிக்க முய
சின்னையாவின்
காரணமாகக்
அவரை எதிரி
கிறார். இப்படி
கான எதிரிக்கு
அபராதம் விதிக்

திட்டம்

லத்துக்கு டக்கும்

லும் .5கோடி

ன்படுத்தி
சதியளிக்
இயை உற்
ம் பெறும்
ள்ளத்தாக்
ம். ஏனைய
திலும் வட

தற்போதைய
ருட மொத்த
த்திற்குச் சமமான
இதனால் விவசாயத்
ம் 132 கோடிரூபா
சாரத்தின் மூலம்
ரூபாவுமாக
ம் 140.5 கோடி
இலாபம் கிடைக்கு
எதிர் பார்க்கப்படு
இத்தொகை
8-ம் நிதி வருடத்தில்
க அரசாங்கம் எதிர்
இறைவரியில் 50
த்திற்கு மேற்பட்ட

முதல் வேலைத் திட்டம்

இவ் வேலைத்திட்டம் மிக பிரமாண்டமானதாலும் இதனை அமுல்செய்ய தகுந்த நிதி தேவைப்படுவதாலும் இது பல கட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் மூன்று பிரதான அபிவிருத்தி அம்சங்களுண்டு. இலகுவான முறையில் செயல்படுத்துவதற்காக முதலாம் அம்சத்தை மூன்று உப-திட்டங்களாகப் பிரித்துள்ளனர். நதியின் நீரின் ஒரு பாகத்தை கலாஓயாவுக்குத் திருப்புதற்காக ஒரு சுரங்கம் அமைப்பதுடன், மகாவலி கங்கையை மறித்துத் திருப்புதற்கு பொல்கொல்லையில் அணைக்கட்டு ஒன்றும், அம்பன்கங்கை நதி நாலந்தா ஓயாவைச் சந்திக்கும் சங்கமத்திற்குக் கீழ போவதென்னை என்னுமிடத்தில் ஒர் நீர்த்தேக்கம் அமைப்பது, கலாஓயா பள்ளத்தாக்குப் பிரதேசத்திற்குத் தேவையான நீரைத் திருப்புவது ஆகியவை முதலாம்வேலைத் திட்டத்தில் பிரதான அலுவல்களாகச் சேர்க்கப்பட்டுள்ளன. மின்சார நிலையங்கள், வாய்க்கால் அமைப்புகள், காணி அபிவிருத்தியுட்பட இவ்வேலைத் திட்டத்திற்கு 57 கோடியே 57 லட்சம் ரூபாய் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வேலைத்திட்டத்தின் பயனாக 84,500 ஏக்கர் புதுக்காணிகள் நீர்ப்பாசன வசதி பெறுவதுடன், ஏற்கனவே வரட்சி மண்டலத்தில் நெல் விவசாயம் செய்யப்படும் 1,02,200 ஏக்கர் நிலங்களுக்கும் வருடம் பூராவும் நீர் வழங்கும் வசதி ஏற்படும். மின்சார நிறுவனத்திற்கு மேலும் 39.5 கிலோவாட் மின்சக்தி சேர்த்துக் கொள்ளப்படும்.

1698/69-ம் நிதி வருடத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்படும் இவ்வேலைத்திட்டம், நாட்டின் அபிவிருத்தியில் ஒரு முக்கிய நடவடிக்கையாக இருக்கும். இத்திட்டத்தை 1972-ல் பூர்த்தி செய்ய நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

உத்தேச முதலாம் வேலைத்திட்டத்தால், நீர்ப்பாசன வசதிகளிலும், விவசாயத் துறைகளிலும் சிறு அபிவிருத்தி செய்வதன்மூலம், 12 கோடியே 80 இலட்சம் ரூபா வருடாந்த விவசாய ஆதாயம் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், பெரியளவு அபிவிருத்தி செய்தால் இத்தொகை 16 கோடியே 70 இலட்சம் ரூபாவாக உயரும். வருடாந்த மின்சார ஆதாயம் 1 கோடியே 17 இலட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மொத்தவருடாந்த ஆதாயம் முதலீடு செய்த தொகையில் 24 சதவீதத்திலிருந்து 31 சதவீதத்திற்கு அதிகரிக்கும். இப்புள்ளி விபரங்கள் உத்தேச திட்டத்தின் பெருமதியை தெளிவாகக் காட்டுகின்றன.

கொண்டு

வேண்டுமென அவர்
ளார். இன்னைய
சாரமாக ஆலயத்தி
பிரவேசிக்க முயன்
நாள் ஆகுதவில்லை
கூ ளார்.
எதிர் அவரைப்
த்தவேண்டிய
ம் ஏற்படவில்லை.

சாட்சியமளித்த
அவர் எடுத்துக்
உண்மை நோக்க
வெளிப்படையான
மையும் என்னைப் பெரி
வைத்தன. இருந்தும்
தினத்தில் எதிரி
வில் நடந்துகொண்ட
எத்தன்மையும்ஏற்
றாராகவும் முன்னணி
நின்றார் என்பதைக்
றுகிறது. எதிரி தமது
ல்களைக் கோர்ட்டில்
மையாகவும், வெளிப்
டையாகவும் ஒப்புக்
ண்டிருக்கிறார். இக்
ச் சந்தர்ப்பத்தில் இவ
விஷயங்களில்
உண்மையினின்றும்
விருப்பார் என்று
நினைக்க நியாயமில்லை.

வே இன்னொருவரின்
லயப் பிரவேசத்தைத்
தபொழுது எதிரி
ந்தாரம் பிரவேசிக்க
வென்பதை நான்
ஏற்றுக் கொள்கிறேன்.
மதத்தவரான இவ்
வழிபாடு செய்யும்
த்துடன் மாவிட்ட
ந்தசுவாமி கோவி
உட்பிரகாரத்தினுள்
வசிக்க முயன்றபோது
ரையாரின் சாதியைக்
ணமாகக் கொண்டு
எதிரி தடுத்திருக்
ர். இப்படி தடுத்தமைக்
எதிரிக்கு ரூபா 50
ராதம் விதிக்கின்றேன்.

அவர்கள் பார்வையில்

செல்வாவைக் கும்பிட்டு பதவிக்கு வந்தாராம் பிரதமர்

பராக்கிரமபாகுவின் பெயருக்கு இழுக்கு

'தவஸ' பத்திரிகை 23ந் திகதி பின்வரும் செய்தியைப் பிரசுரித்துள்ளது.

தமிழ் குடியரசுக்கட்சி என்ற பெயரில் யாழ்ப்பாணத்தில் புதுக் கட்சி ஒன்று உருவாக்கப்படுகிறது. இந்தக் கட்சிக்கு ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம் தலைமைதாங்குவாரென்று எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த மாதம் முற்பகுதியில் இதன் அங்குரார்ப்பணம் நடைபெறும்.

'தவஸ' அன்று வெளியிட்ட இன்னொரு செய்தி:

வடபகுதியில் பௌத்த மத போதனைக்காக நிறுவப்பட்டுள்ள எல்லாச் சிங்கள தமிழ்ப் பாடசாலைகளையும் அரசாங்கம் எடுத்து நடத்த வேண்டுமென்று வண. நாரத தேரோ பிரதம மந்திரியைக் கேட்பதற்கு முடிவுசெய்திருக்கிறார். வடக்கில் இந்து மதத்தையும், பௌத்த மதத்தையும் பரப்புவதற்கு தம்மாலான உதவிகளைச் செய்யத் தாம் எப்போதும் தயாராயிருப்பதாக வண. நாரததேரோ கரவெட்டியில் நடைபெற்ற கிராமதான இயக்கமொன்றில் பேசும்போது கூறினார்.

'சிறிலக்க' 23ந் திகதி பின்வரும் செய்தியை வெளியிட்டுள்ளது.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த பிறகு உத்தியோகம் பெற்ற அனைவரும் யு. என். பி. ஆதரவாளர்கள். அடுத்த தேர்தலில் இதே அரசாங்கம் பதவிக்கு வருவதற்காக இவர்கள் உழைப்பார்கள்.

இந்த யு. என். பி. ஆதரவாளர்களைத் தத்தமது ஊர் பகுதிகளுக்குத் தேர்தல் காலத்தில் இடமாற்றஞ் செய்யவேண்டியதன் அவசியம் பற்றிப் பிரதம மந்திரி சுட்டிக்காட்டியிருக்கிறார்.

'அத்த' 23ந் திகதி எழுதிய தலையங்கம் பின்வருமாறு.

பிரதமந்திரி திரு. டட்லி சேனநாயக்கா தாம் பராக்கிரமபாகு போன்றவர் என்று கூறியிருக்கிறார். முன்னும் பராக்கிரமபாகு தென்னிந்தியாவுக்குப் போய்ச் சோழ (தமிழ்) மன்னனைக் கும்பிட்டு அவருக்கு அனுமதி பெற்ற மன்னன் ஆனான். அதுபோலவே டட்லியும் செல்வாவின் காலில் விழுந்து கும்பிட்டு பதவிக்கு வந்தார்.

9ம் பராக்கிரமபாகு போர்த்துக்கேயருக்கு நாட்டைக் காட்டிக்கொடுத்ததுபோல் நவீன போர்த்துக்கேயரான அமெரிக்கருக்கு டட்லியும் நாட்டைக் காட்டிக்கொடுத்து விட்டார். எதுவானாலும், மகாபராக்கிரமபாகுவுடன் திரு. டட்லி சேனநாயக்கா தம்மை ஒப்பிட்டுக் காட்டியிருக்கிறார் என்பது தெளிவு.

'டட்லி ஷெங்டன்' என்ற பெயரைப் பாருங்கள். இந்தப் பராக்கிரமபாகுவுக்கு ஒரு சிங்களப் பெயர் இருக்கவேண்டும். அதை ஒரு பக்கம் வைத்தாலும், மகா பராக்கிரமபாகு தெற்குடன் வடக்கின் இறுதி எல்லைவரை நாட்டை ஒன்றுபடுத்தினார். ஆனால் நமது பூதம் வடக்கையும் கிழக்கையும் ஒரு உடன்படிக்கைமூலம் தனிச்சொத்தாக சமஷ்டிவாதிகளுக்கு கொடுத்திருக்கிறார்.

இதுதவிர நாட்டின் மத்திய பகுதியை தொண்டமானுக்கும் நாம் தமிழருக்கும் பல்வேறு இந்தியவகுப்புவாதிகளுக்கும் கொடுப்பதற்கு தயாராகிக்கொண்டிருக்கிறார்.

பராக்கிரமபாகு காலத்தில்தான் விவசாயம் செழிப்பாகவிருந்தது என்பதால் அவருடன் இவர் தம்மை ஒப்புக்காட்டியிருக்கலாம். ஆனால் காமிரா, ரேடியோ செய்திப் பத்திரிகை, இவைகளைக் கொண்டு பராக்கிரமபாகு விவசாயத்தை விருத்தி செய்யவில்லையென்று டட்லியின் சொந்த 'சிலுமின' பத்திரிகைதான் ஒருமுறை கூறியது.

மகா பராக்கிரமபாகுவின் பெயருக்கு வெட்கமில்லாமல் செய்யப்பட்டுள்ள இந்த இழுக்கு குறித்து வழக்குத் தொடர அவர் பரம்பரையில் ஒருவரும் இப்பொழுது உயிருடன் இல்லை.

நவம்பர் 4-ல் விருது வழங்குவர்

உரும்பராய், சனி

சாகித்திய மண்டலப் பரிசுபெற்ற பண்டிதமணி கணபதிப்பிள்ளைக்கு கொழும்பு சைவமங்கையர் கழக மண்டபத்தில் உயர் உறுப்பினர் என்ற விருது வருகிற 4-ம் திகதி வழங்கப்படவிருக்கிறது.

ஸ்ரீ லங்கா சாகித்திய மண்டலத்தின் உயர் உறுப்பினர் என்ற விருதைப் பெறும் முதலாவது தமிழர் இவரேயாவார்.

ஆசிரியருக்குக் கடிதம்

அச்சகங்களும் பத்திரிகைக் கடதாசித் தட்டுப்பாடும்

யாழ்ப்பாண நகர அச்சகங்கள், புறாவ் எடுத்தல், சிறு துண்டுப் பிரசுரங்கள் அச்சிடுதல், டுப்ளிகேற் கடதாசிகள் போன்ற தேவைகளுக்குப் பாவிப்பதற்கு பத்திரிகைக் கடதாசி (நியூஸ் பிறின்ற்) றைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையிலுள்ளன.

இப்பத்திரிகைக் கடதாசியை, கடதாசி விற்பனைவு உத்தரவு பெற்ற வியாபாரிகளிடம் கேட்டாலும் இல்லை என்று கைவிரிக்கிறார்கள்.

கிழக்கிலங்கைக் கடதாசிக் கூட்டுத் தாபனத்தாரும் இப்பத்திரிகைக் கடதாசிப் பங்கீடு சம்பந்தமாக தங்களோடு தொடர்பு கொள்ளும்படியாகக் கேட்டிருக்கிறார்கள். இதுசம்பந்தமாக எப்படித் தொடர்பு கொள்வது, எப்படி பத்திரிகைக் கடதாசியைப் பெற்றுக் கொள்வது என்பது பற்றி அச்ச [illegible] தொடர்பு கொண்டாலும் பத்திரிகைக் கடதாசி எங்களை வந்துசேர ஆறு மாதங்களாவது செல்லும்.

ஆகையினால், முன்பு கிழக்கிலங்கைக் கடதாசிக் கூட்டுத்தாபனத்தால் அச்சகங்களுக்கு வழங்கப்பட்ட கடதாசிப் பங்கீட்டு அட்டைகளின் பெறுமதிக்குத் தகுந்தவாறு விகிதாசாரப்படி பங்கிட்டுக் கொடுப்பது சுலபமான வழியாகும். அத்துடன் எங்கள் அச்சகங்களும் இலகுவிலும், தாராளத்துடனும் பத்திரிகைக் கடதாசியைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாகவும் இருக்கும். அச்சகங்களுக்கு இதன்மூலம் சிரமமும் குறையும்.

இதுசம்பந்தமாக எமது வடமாகாண அச்சிடுவோர் சங்கமும், கிழக்கிலங்கைக் கடதாசிக் கூட்டுத் தாபனத்துடன் தொடர்பு கொண்டுள்ளது.

மு.வி.ஆசீர்வாதம் ஜே.பி.,
வடமாகாண அச்சிடுவோர்
சங்கக் காரியதரிசி
யாழ்ப்பாணம்.

மன்னார் பெரியமடு

குடியேற்ற வாசிகளின் குறைகள்

வெள்ளவத்தை, சனி

பொது மராமத்துத்தபால் தந்திப் போக்குவரத்து அமைச்சர் திரு மொண்டேகு ஜயவிக்கிரமாவுக்கு மன்னார் மாவட்டத்துப் பெரியமடு குடியேற்றவாசிகளால் அளிக்கப்பட்ட பொதுவரவேற்பின் போது பின்வரும் குறைபாடுகளைக் கொண்ட மகஜர் ஒன்று அப்பகுதி மக்களால் வாசித்துக் கையளிக்கப்பட்டது.

250 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ள பெரியமடுக் குடியேற்றத் திட்டத்தின் பாதைகள் இன்னும் சீர்திருத்தப்படவில்லை. பெரியமடு—விடத்தல்தீவு ரோட்டு சுமார் 8 மைல் தூரத்திற்கு இன்னும் திருத்தப்படவில்லை.

குடியேற்ற வாசிகளின் தபாற்தந்தோர் சம்பந்தமான எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்யக் கூடியதாக தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் 'பி' தர உபதபாற் கந்தோரின் தரத்தை 'ஏ' தரம் ஆகத் தரமுயர்த்தித் தருவதுடன் தந்திப் போக்குவரத்து வசதிகள் செய்துதர வேண்டும்.

பெரியமடு குடியேற்ற வாசிகளின் குறைபாடுகளை கவனிப்பதாக வாக்களித்த மந்திரி முக்கியமாக வெகுவிரைவில் பெரியமடு உபதபாற்கந்தோரைத் தரமுயர்த்துவதற்கு தாம் ஆவன செய்வதாகக் கூறினார். இப்பாராட்டுக் கூட்டத்தில் மன்னார் எம். பி. யும் மாகாண அதிபரும் கலந்து கொண்டனர்.

மாஸ்கோவில்

இந்திய பாதுகாப்பு மந்திரி சுவர்ண்சிங்

மாஸ்கோ, ஒக். 26

ரஷ்யத் தலைநகரான மாஸ்கோ வந்துள்ள இந்திய பாதுகாப்பு மந்திரி சர்தார் சுவர்ண்சிங், ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சிக்காரியதரிசியும், முக்கிய தலைவர்களில் ஒருவருமான திரு. பிரெஷ்னெவ்வும், ரஷ்ய பாதுகாப்பு மந்திரி மார்ஷல் கிரெஷ்கொவ்வையும் சந்தித்துப் பேசியுள்ளார்.

இப்பேச்சுவார்த்தைகள் மிகவும் சுமுகமான சூழ்நிலையில் நடைபெற்றதாகவும், பரஸ்பர விஷயங்கள் பற்றி ஆலோசிக்கப் பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் சர்தார் சுவரண்சிங், ரஷ்ய பாதுகாப்பு மந்திரி மார்ஷல் கிரெஷ்கொவ்வுடன் சென்று, ரஷ்யப் பிரதமர் திரு. அலெக்ஸி கொஸிஜினைச் சந்தித்துப் பேசினார்.

எனது டயறி

வடக்கிலுள்ள மக்களை ஒரு சிங்கள கூட்டுறவு அதிகாரி பெரிதும் பாராட்டி, தென்னிலங்கையில் பேசியிருக்கிறார். அரசாங்கத்திடம் பெறும் கடன் உதவியை நன்கு பயன்படுத்திக் கொண்டு, வாங்கிய கடனை எல்லாம் தமிழர் திருப்பிக் கொடுத்துவிடுகிறார்கள் என்றார்.

அபிவிருத்தி வேலைகளில் வடமாகாண மக்கள் பிறருக்கு முன்மாதிரியாக இருப்பதாயும், வெங்காயம், உருளைக்கிழங்கு காய்கறிகள், திராட்சைப்பழம் முதலியவற்றைக்கூட வெற்றிகரமாக உற்பத்தி செய்துவருவதாகவும் போற்றியுள்ளார் ஆனந்த செம்பக்குட்டி ஆராய்ச்சி என்ற அந்த அதிகாரி. இதைப் பற்றி தமிழர் பெருமை கொள்ள நியாயமுண்டு.

நீர்வளம் முதலியன குறைந்திருப்பினும் தங்கள் உடல் உழைப்பாலும், நாணயத்தாலும்தான் இப் பாராட்டுதலைத் தமிழர் பெற முடிந்துள்ளது. தென்னிலங்கையில் பலர் விவசாயத்துக்காகக் கடன் பெற்று அதைத்திருப்பிக் கொடுக்காத காரணத்தால் அவர்களது அரிசிக்கூப்பன் புத்தகங்களை அரசாங்கம் கைப்பற்றி வருகிறதாம். அந்த அவப்பெயரும் [illegible]டமும் வடமாகாண மக்களுக்குக் கிடைக்காமல் செய்த தமது விவசாயிகளை நாம் எவ்வளவு போற்றினாலும் தகும்.

உண்மை உழைப்பும் நாணயமுமுள்ள தமிழ் விவசாயிகளுக்கு, குடியேற்றத் திட்டங்களில் சம வசதியாவது அளிக்கவேண்டாமா? அரசியல் முதலிய காரணங்களால் அவர்களை ஒதுக்கி, பாரபட்சமாக நடத்துவதாயின் அது சரியா, நாட்டுக்கு நல்லதா?

ஃ ஃ ஃ

மெக்ஸிகோவில் நடந்த ஒலிம்பிக் ஹாக்கிப் பந்தயத்தில், இந்தியா ஆஸ்திரேலியாவிடம் 'செமிபைனல்ஸ்' ஆட்டத்திலேயே தோற்றுவிட்டதை யாரும் எதிர்பார்க்கவில்லை. சென்ற 40 ஆண்டுகளில் இந்தியா 'பைனல்' என்ற இறுதிக் கட்டத்தை அடையாமல் தோற்றது இதுவே முதல் தடவையாகும்.

ஒரே நாடாக இருந்த இந்தியா, இரண்டாகப்பிரிக்கப்பட்டதும், பல்முறையும் இறுதி ஆட்டம் போட்டி இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமே இருந்துவந்தது. அந்தநிலை இப்போது மாறிவிட்டது. விளையாட்டுகளில் வெற்றிதோல்விகள் ஏற்படுவது சகஜந்தான். ஆனால் ஒலிம்பிக் பந்தயங்களிலே இந்தியா இலங்கை முதலிய நாடுகள் ஒரு பதக்கமும் பெறாமல் போவது மகிழ்வோ, பெருமையோ அளிப்பதல்ல.

ஒலிம்பிக் வெற்றி, ஒரு நாட்டின் புகழையும் பெருமையையும் அதிகரிப்பதால், இவ்விஷயத்தில் நமது நாடுகள் அதிக ஊக்கம் காட்டி, நமது விளையாட்டு வீரர்களுக்கு அதிக உற்சாகமும் ஆதரவும் அளிப்பதாயின், இலங்கையும் கூட பல தங்கப்பதக்கங்களைப் பெறக்கூடும். உலக அரங்கிலே தொடர்ந்து தோல்வியே பெறுவதாயின், இதில் ஏன் நாம் கலந்து கொள்ள வேண்டும்.

—ஹரன்

பண்டத்தரிப்பு, சனி

குழந்தைகளைப் பீடிக்கும் மர்ம நோய் பற்றியும் அதனால் விளையும் கேடுகளையும் தடுப்பு முறைகளையும் விவரமாக எடுத்துரைக்கும் துண்டுப்பிரசுரங்களை சௌக்கியப்பகுதியினர் இப்பகுதியில் விநியோகம் செய்து வருகின்றனர்.

நீதிபதியை திணற வைத்த நாவலர்!

— தென்மயிலை .சண்முகன் —

நம் நல்லைநகர் நாவலர் பெருமான் ஒருநாள் காலை சென்னைக் கடற்கரையில் காற்றுவாங்கியவாறு உலவி வந்துகொண்டிருந்தார். அந்த வேளையிலே நாவலர் வந்த வழியிலுள்ள ஒருவீட்டுக்கு திடீரெனத் தீப்பற்றிக் கொண்டது.

இந்தச் சம்பவம் சம்பந்தமாய் நடைபெற்ற வழக்கிலே நாவலர் சாட்சியாக அழைக்கப்பட்டிருந்தார். நீதிமன்றத்திலே நீதிபதி நாவலரிடம், 'தீப்பற்று நிகழும் போது எத்தனைமணி இருக்கும்? அந்த வேளையில் நீர் என்ன செய்துகொண்டிருந்தீர்' என்று கேட்டார். நாவலர் உயர்ந்த ஆங்கிலத்தில் பதிலைச் சொன்னார். அவர் ஆங்கிலத்தில் பதில் கூறியது நீதிபதிக்குப் பிடிக்கவில்லை. தமிழிலேயே பதிலைப் பகருமாறு பணித்தார். இதுநாவலருக்கு ஆத்திரத்தைக் கொடுத்தது. ''அருணோதய எல்லிஎழ நாளுழிப் போதினாய் ஆழிவரம் பணித்தே காலேற்றுக் காலோட்டப் புக்குழி'' என்று விடை சொன்னார் நாவலர்.

நாவலர் தமிழைப் புரிந்து கொள்ளமுடியாமல் நீதிமன்றத்திலிருந்த அனைவரும் திகைத்தனர். நாவலர் பேசியதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து நீதிபதிக்குச் சொல்லவேண்டிய மொழிபெயர்ப்பாளர் விழித்தார். நாவலரின் விடை இதுதான்: ''சூரியன் வானத்தில் எழுந்து நான்கு நாழிகை இருக்கும், நான் கடலோரத்திலருகே காற்று வாங்கியவாறு உலாவச்சென்றபோது''.

பாரதியார்

— நவாலியூர்க் கவிராயர் —



புதுவை என்னும் ஊரிலங்கே
  'பூந்த கவிஞன் பாரதியார்!
புதுமைக் கவிதை பலபுனைந்து
  புதுக்கி வைத்த பாரதியார்!

பாப்பா பாடல் பாடிவிட்டான்
  பகுத்தறி வாலே மூடியிட்டான்
காப்பா ருக்குள் கவிஞரைக்
  கல்லாக நின்றான் தமிழழயே!

வீர சுதந்திரம் வேண்டிநின்றான்
  வீறுற்ற பாரதமென்று சொன்னான்
தீர அடிமைகள் இங்கிருந்து
  தேனைப் பள்ளு பாடிவிட்டான்!

வெள்ளையன் வந்தே வரிகேட்டு
  வெருண்டு விளர்ந்த தமிழரிடம்,
கொள்ளை யடிப்பதைக் கண்டேகவி
  கணக்கில் லாமல் திட்டினானே!

அன்னியன் செய்த அற்பதனம்
  அடங்க வேவெறி கொண்டுநின்றான்
எந்தமிழ்க் காவலன் பாரதியார்
  என்றுமே எங்கும் வாழ்ந்திடுவார்!

தெரிந்து கொள்ளுங்கள்

○ கொடிய மூளைவியாதியை மாற்ற வழிகண்டவர் யார்?

சேர். டேவிற் பெறியர்.

○ முதல் விண்வெளிப் பிரயாணியாகிய நாயின் பெயரென்ன? யாரால்? எப்போது அனுப்பப்பட்டது?

i லைக்கா. ii ரஷ்யரால்
iii 3-11-1957ல்.

○ உலகில்முதற்புகையிரதப் பிரயாணம் எங்கே? எப்போது ஆரம்பமானது?

i இங்கிலாந்தில்.
ii 27-9-1825-ல்.

○ மின்சாரக் காந்த இயலைக் கண்டுபிடித்தவர் யார்?

மைக்கல் பரடே.

○ மின்சாரத்தந்தியைக்கண்டு பிடித்தவர் யார்?

சாமுவேல் பி. மோர்ஸ்.

அனுப்பியவர்:
ஜே. கில்பேட்

நல்லை ஆதீனத்தில் குன்றக்குடி அடிகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்திற்கு, தவத்திரு குன்றக்குடி அடிகளார் விஜயஞ்செய்து, பூஜையிலே கலந்து அறிவுரை வழங்கினார். அவர் பேசும்போது இத்தகைய ஸ்தாபனங்களுக்கு இன்னல் வருவது இயற்கை என்றும், உறுதியும் வைராக்கியமும்கொண்டு உழைத்தால் வளர்ச்சிக்குச் சந்தேகமில்லையென்றும், நாவலர் இருந்த நல்லையில் இவ்வாதீனம் அமைந்தது ஒரு தனிச் சிறப்பென்றும், எத்தகைய உதவியும் அளிக்கத் தாம் தயாரென்றும் கூறினார்.

கந்த ஷஷ்டி

யாழ்ப்பாணம், ஞாயிறு

சங்கரத்தை சாந்தை குளத்தை முருகமூர்த்தி கோவிலில் கந்த ஷஷ்டி உற்சவத்தை முன்னிட்டு நாளை திங்கட்கிழமை திரு. கே. சித்திரவேலின் பக்திப் பாடல் கச்சேரியும், வண்ணை பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மாவின் 'வள்ளி திருமணம்' என்னும் பொருள் பற்றிப் பிரசங்கமும் நடைபெறும். [நி.]

படம் பிடித்தனர்

பண்டத்தரிப்பு, சனி

மீனவர்களுக்கு அடையாளஅட்டை வழங்குவதற்காக வலி மேற்குக் காரியாதிகாரி கந்தோரில் மீனவர்கள் படம் பிடிக்கப்பட்டனர்.

மலேஷியாவில் இரு மாதம்!

(சென்றவாரத் தொடர்ச்சி)

வானத்தை முட்டி நிற்பது போன்ற உயர்ந்துநின்ற கட்டடங்கள் இப்போதும் என் கண்முன்னே நிற்கின்றன!

மலேசியாவின் தலைநகரம் கோலாலம்பூரில் சாதாரணமாக மூன்றுமாடிகளெல்லாம் காணக்கூடிய பத்து பதினைந்து அடுக்குக்கட்டிடங்களைத்தான் மேல குறிப்பிட்டேன்!

அழகுக்கு அழகு ஊட்டுவது போன்று அருமையான நகரம் கோலாலம்பூர்!

இங்குதான் தமிழர்கள் நிறையப்பேர்வாழ்கிறார்கள்.

இலங்கை, இந்திய நாட்டைச் சேர்ந்த நம்மவர்களுடன் இங்கு நான்பலநாட்களைக்கழித்தேன்.

சைவ ஆலயங்கள் இங்கு நிறைய உண்டு. இவற்றுள் பத்து மலைக்கோவில் என்பது பிரசித்தி பெற்ற ஒரு தலமாகும். இக்கோயில்மலைக்குமேல் இருக்கிறது. இக்கோயிலுக்கு சாமி கும்பிட தமிழர்கள்மட்டுமல்ல மலேய்க்காரர், சீனர்கள், மற்றும் பிறநாட்டினரைச் சேர்ந்தவர்கள் வருவார்கள்.

300 படிகள் ஏறினால்தான் மலையிலுள்ள இக்கோயிலுக்குப் போகலாம். நான் இக்கோயிலுக்குச்சென்றசமயம் புனருத்தாரண வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

மலேஷியாவின் மிகப் பெரிய அழகாக அமைக்கப்பட்டுள்ள ஸ்ரேடியம் என்ற விளையாட்டரங்கையும் சென்று பார்த்தேன். ஒரே நேரத்தில் 60,000 பேர் இருந்து விளையாட்டுக்களைக் கண்டுகளிக்கக் கூடிய விதத்தில் இந்த ஸ்ரேடியம் மிக அருமையான முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

ஜப்பான், ஹொங்கொங்' அமெரிக்கா, சிங்கப்பூர், ஜெர்மனி ஆகிய நாடுகள் கலந்து கொண்ட உதைப்பந்தாட்டப்போட்டிகளை இந்த ஸ்ரேடியத்தில் பார்க்கும் வாய்ப்பு எனக்கும் கிட்டியது.

நான் உலக நாடுகளுக்குச் சென்று அந்தந்த நாட்டுமக்களைச்சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்காவிட்டாலும் மலேஷியா அந்தச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியது. பலநாட்டவர்களையும் மலேஷியாவில் சந்தித்தேன். அவர்கள் எப்படிப்பட்டவர்கள், எவ்வித குணாதிசயங்கள் கொண்டவர்கள் என்பதையெல்லாம். அறிய முடிந்தது.

மலேஷியாவில் நான் தங்கியிருந்த சமயம் எனது கண்களைப் பரிசோதனை செய்து பார்ப்பதற்காக மலேஷிய டாக்டர் ஒருவரிடம் சென்றேன்.

அப்போது அவர் என்ன சொன்னார் தெரியுமா?

(அடுத்தவாரம் முடியும்)

உங்களுக்கு சதா கோபம் வருகிறதா?

இதோ ஒரு மருந்து!

உங்களுக்கு சதா கோபம் குமுறிக்கொண்டு வருகிறதா? எந்நேரமும் கடுகடுப்பாகவும் எரிச்சலாகவும் இருக்கிறீர்களா?

இந்த வேண்டாத உணர்வுகளை நீக்க இதோ ஒரு அற்புதமருந்து! லெனின்கிராட் ரசாயன விஞ்ஞானி பேராசிரியர் வி. பெரகவின் இந்த ஔஷதத்தைக் கண்டு பிடித்துள்ளார்.

'பெனிக்கல்' என்பது இதன் பெயர். மனித அமைப்பிலுள்ள சில மூலகங்களை அடிப்படையாகக் கொண்டு பேராசிரியர் இந்தமருந்தை உருவாக்கியுள்ளார். மூளைக்கோளாறு, காக்காய்வலிப்பு போன்ற வியாதிகளை இந்த மருந்து குணப்படுத்துவதுடன் பீதி, பயம் போன்ற உணர்வுகளையும் விடுவிக்கிறது.

வாழ்க்கையில், பிரயாணம், உழைப்பு, படிக்கமுனையும் பெருந்தொகையான தகவல்கள் ஆகியவற்றால் நவீன மனிதன்எண்ணிறைந்த மன எழுச்சிகளுக்கும், சுமைகளுக்கும் இலக்காகிறான் என்றார் பேராசிரியர் பெகவின்.

'ஈழநாடு' மாணவர் கட்டுரைப் போட்டி

'ஈழநாடு' 10-வது ஆண்டு நிறைவினை முன்னிட்டு 'ஈழநாடு' மாணவரிடையே கட்டுரைப் போட்டிகளை நடாத்தவிருக்கின்றது.

அகில இலங்கை அடிப்படையில் போட்டிகள் நடாத்தப்படும். மேற்பிரிவு, கீழ்ப்பிரிவு என போட்டிகள் இரு பிரிவாக அமையும். மேற்பிரிவுக்கான போட்டிக் கட்டுரைகள் 1000 சொற்களுக்கு மேற்படாமலும், கீழ்ப்பிரிவுக்கான கட்டுரைகள் 700 சொற்களுக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.

கட்டுரைக்கான தலைப்புகள்

மேற்பிரிவு: காந்தியும் பத்திரிகையும்.
கீழ்ப்பிரிவு: காலத்தின் கண்ணாடி.

போட்டி முடிவு திகதி:15-11-68.

போட்டியில் பங்குபற்றுவோர் இங்கு வெளியாகியிருக்கும் கூப்பனை நிரப்பி, தமது விஷயங்களுடன் அனுப்பிவைக்கவேண்டும். மாணவர் [illegible] சாலை அதிபரால் கட்டுரை ஊர்ஜிதம்செய் [illegible] கீழ்ப்பிரிவில் 18 வயதுக்குட்பட்ட மாணவர்களும் மேற்பிரிவில் 22 வயதுக்குட்பட்ட மாணவர்களும் கலந்து கொள்ளலாம்.

ஈழநாடு 10வது ஆண்டு விழாப் போட்டி

பெயர்: ______________________
விலாசம்: ______________________
____
போட்டியின் பெயர்: ______________________
பிரிவு: ______________________
வயது: ______________________

திகதி ______________________ கையொப்பம்

குருநகர் விளையாட்டுக்கழக வருடாந்த போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், சனி

குருநகர் விளையாட்டுக்கழகத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி, கழகத்தின் மைதானத்தில் தலைவர் புறக்டர் ஏ. அன்ரனி கொடியேற்றி வைத்ததுடன் ஆரம்பிக்கப்பட்டது. இவ்விளையாட்டுப் போட்டிக்கு அரசாங்கஅதிபர் திரு. வேனஸ் அபயசேகரா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வெற்றிபெற்ற வீரர்களுக்கு பரிசில்களை வழங்கினர்.

இவ்விளையாட்டுப்போட்டியின் முடிவுகள் பின்வருமாறு:—

மேற்பிரிவு

880 யார் ஓட்டம். எஸ் ஏ சில்வெஸ்ரர், எஸ் யேசுதாசன், பிரான்சிஸ்.

நீளம்பாய்தல்: யோ தோமஸ்மூர், அமலதாஸ், பிரான்சிஸ்.

220 யார் ஓட்டம்: யோ தோமஸ்மூர், எஸ் பி. மதுரநாயகம், ம செல்வராசா.

100 யார் ஓட்டம்(பெண்) எஸ் வரதராணி, யோ ரதி, எம் சாரதா.

தீபம்கொண்டு ஓடுதல்: (பெண்): யோ றதி, எஸ் வரதராணி, எஸ் இறைன் இனா.

440 யார் ஓட்டம்: தோமஸ்மூர், அமலதாஸ், அ தர்மராசா.

அவசரப் பயணம் (பெண்) இ மதுரநாயகி, ம சகாயருணி. ஏ ராணி.

மத்தியபிரிவு

880 யார் ஓட்டம்: எற்வேட், யூனியன், குவைனன்.

100 யார் ஓட்டம்: வ அல்போன்ஸ், வே யூனியன், பி நீக்கிலஸ்.

440 யார் ஓட்டம்: வ அல்போன்ஸ், எற்வேட், குவைனன்.

சாக்கோட்டம்: வ அல்போன்ஸ், பி நீக்கிலஸ், குவைனன்.

சைக்கிள் ஓட்டம் 10 மைல்: அந்தோனிப்பிள்ளை, தாசியஸ், லெயிற்றன்.

கீழ்ப்பிரிவு

100 யார் ஓட்டம்: இவ்விமல், ஜெகநாதன், எஸ் ராஜன்.

சைக்கிள் ஓட்டம் 5 மைல்: செ மரியதாஸ், எஸ் ராஜன், வெ தனம், ஆறுதல் பரிசு: ம அன்ரன், எமிலியூஸ், இ டல்ஸ்ரன்.

220 யார் ஓட்டம்: பி இறின் ஜோசப்பர், எஸ் ராஜன், அ யேசுதாசன்.

வளையம் உருட்டல்: வி பிரான்சிஸ், செ யேசுராசா, வெ மிக்றன்.

சுற்றி ஓடுதல்: (பெண்) பி மேரிராணி, ரி பெலிஸித்தா, ஞா பவளறதி.

ஊசிநூல் கோர்த்தல்; சவுறூறதி, யேசிந்திரேஸ், க ராணி.

வடை உண்ணல்: ம அன்ரன், எமிலியூஸ், எஸ் ஜேமியேஸ், அ ஞானசீலன்.

எலுமிச்சம்பழம் கொண்டு ஓடுதல்: பி அன்னராணி ம ஜெசிசிலி, மேரிருணி.

மூன்றுசில்லு சைக்கிள் ஓட்டம்: குவிகுமார், மரியதாஸ், பாபு.

பாலர் பிரிவு

100 யார் ஓட்டம்: எஸ் மரியதாஸ். ய பிரபாகரன், எ றஞ்சநாதன்.

வடைஉண்ணல்: யே மரியதாஸ், மு சேவியர், யே அழகு.

50 யார் ஓட்டம்: பி ஜேசுதாசன், தே செபஸ்ரியன், ரா ஜெருகாசியஸ்.

பலூன் உடைத்தல்: மரியதாஸ், றேமியோ, குலேந்திரன்.

தடைதாண்டி ஓடுதல்: ரவிசநாதன், அழகு. பிரபாகரன்.

நாணயக்காசு எடுத்தல்: குலேந்திரன், செபஸ்ரியன், அருள்தாசன்.

எலுமிச்சம்பழம் கொண்டு ஓடுதல் (பெண்): அன்னராணி, ஜெஸசிலன், மேரி ருணி.

ஐஸ்பழம் உண்ணல்: அன்ரன், றேமியோ, ஜெக்மரியதாஸ்.

வெளியாளர்களுக்கு நடத்தப்பட்டபோட்டிகளின் முடிவுகள் வருமாறு:

குண்டெறிதல்: தோமஸ். மெக்குஸ், அலோசியஸ்.

சைக்கிள் மெதுவாக ஓடுதல்: பசில், செபமாலை, வின்சன்றோஸ்.

மரதன் ஓட்டம்: அமிர்தநாதன், அகஸ்ரின், பிரான்சிஸ், யேசுதாசன்.

நீச்சல் போட்டி: மரியதாஸ். தேவதாஸ், சிறில்.

விநோத உடைப்போட்டி: ஒலிம்பிக் கிளப், சமூக ஜோதி, இளம்பரிதி மன்றம். [தே. நி.]

இந்துக் கல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். விளையாட்டுச் சங்கத்தினரால் கல்லூரிகளிடையே நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி 'ஏ' பிரிவுக்கோஷ்டி உரும்பிராய் இந்துக்கல்லூரி 'ஏ' பிரிவுக் கோஷ்டியை வென்றது.

யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டி ஆரம்பத்தில் இருந்து இடைவேளைவரை மிகவும் உற்சாகமாகவே காணப்பட்டது. கொக்குவில் இந்துக் கோஷ்டியின் முன்னணி வீரர்கள் இடைவேளைக்கு முன் பல கோல்களைப் போட முயற்சித்தபோது அதை உரும்பிராய் இந்துக் கோஷ்டியின் பின்னணிவீரர்கள் தடுத்துவிட்டனர். இடைவேளையின்போது இருகோஷ்டியினரும் 1—1 கோலைப் பெற்றிருந்தனர்.

இடைவேளையின் பின் கொக்குவில் இந்துக் கோஷ்டியினர் மிகவும் வேகமாக விளையாடி அடுக்கடுக்காக கோல்களைப் போட்டனர். ஆட்டம் முடிவடையும்போது கொக்குவில் இந்துக் கல்லூரி உரும்பிராய் இந்துக்கல்லூரியை 5—1 கோல்களால் தோற்கடித்தது. இப்போட்டிக்கு திரு. உமரையா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

(தே. நி)

சமமான வெற்றி

பருத்தித்துறை, சனி

யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயத்துக்கும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்துக்குமிடையில் நடைபெற்ற 3ம் பிரிவு உதைபந்தாட்டப் போட்டியில் இருகோஷ்டிகளும் தலா 2 கோல்கள் போட்டு வெற்றி தோல்வியின்றி விளையாட்டை முடித்துக்கொண்டன. திரு. வி. ரி. கணேசலிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்.

நெல்லியடி வெற்றி

பருத்தித்துறை, சனி

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய 3ம் பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், விக்னேஸ்வராக் கல்லூரிக்குமிடையில் வடமராட்சி ஆசிரியர் சங்கத்தால் நடாத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நெல்லியடிக் கோஷ்டி 5—0 கோல்களால் வெற்றியீட்டியது. சதானந்தராசா 3 கோல்களும், மகேந்திராசா இவபாலன் ஆகியோர் தலா ஒரு கோலும் போட்டனர். திரு. ஏ. தேச[illegible] மத்தியஸ்தம் வகித்தார்.

தேவரையாளி வென்றது

பருத்தித்துறை, சனி

வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரிக்கும், பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரிக்குமிடையில் வடமராட்சி ஆசிரியர்சங்கத்தால் நடாத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வதிரி தேவரையாளிக் கோஷ்டி 2—1 கோல்களால் வெற்றியீட்டியது. திரு. எஸ். ஞானேந்திரம் மத்தியஸ்தம் வகித்தார்.

செக்.நாட்டிலிருந்து:

8-ம் பக்கத் தொடர்ச்சி

இளைஞர்களுக்கு பாராட்டு

இதற்கிடையில், செக். நாடு தனது 50-வது சுதந்திர தின விழாவுக்குத் தயாராகி வருகிறது. இத்தருணத்தில், நாட்டின் இளைஞர்களுக்குப்பகிரங்கமாக விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் அந்நிய துருப்புகள் நாட்டினுள் பிரவேசித்த போதும், அதற்குப் பின்னரும் இளைஞர்கள் நடந்துகொண்ட விதத்துக்கு செக். தலைவர்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

ஒவசியர்கள் சம்பளம் பற்றி அமைச்சுடன் பேசுவாராம்

வவனியா எம். பி. உறுதிமொழி

உடுப்பிட்டி, சனி

'வடக்கு,கிழக்கு மாகாண உள்ளூராட்சிசேவை ஒவசியர்களின் புதிய சம்பள அமுல் திட்டத்தில் ஏற்பட்டுள்ள தாமதம் கவலைக்குரியதாகும். இச்சம்பள அமுல் விடயமாக நான் வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பதோடு, அவர்களின் சங்கத் தூதுகோஷ்டியில் ஒரு முக்கியஸ்தராகக்கலந்து கொண்டு அமைச்சருடன்பேச்சுவார்த்தைகள் நடாத்தி ஆவன செய்வேன்.'

இவ்வாறு வவனியா எம். பி. திரு. திரு.தா.சிவசிதம்பரம், வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஒவசியர்கள் மத்தியில் உறுதியளித்தார்.

வவனியாறேயல் படமாளிகையில் நடைபெற்றவடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சிசேவைஓவசியர்கள் சங்கத்தின் 4-வதுவருடாந்தமகாநாட்டின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டுபேசுகையிலேயேவவனியா எம்.பி மேற்கண்ட வாறு கூறினர். மாநாடு திரு.எஸ் ஏ ஞானப்பிரகாசம் தலைமையில்நடைபெற்றது.

வவனியா நகரசபைத்தலைவர் திரு.எஸ். பொன்னையா பேசுகையில், 'உரிமைகளைக் கேட்கத் தயங்கக்கூடாது. நாம் எம் மத்தியில் ஒற்றுமையையும், கடமையுணர்ச்சியையும், ஊக்கத்தையும் ஏற்படுத்திக் கொண்டால் எமது கோரிக்கைகளை பெறுவதற்கு பெரிதும் உறுதுணையாக இருக்கும் என்று கூறினர்.

இம்மகாநாட்டில் அடிமட்டச் சம்பள விகிதம்பற்றி வற்புறுத்தப் பட்டதுடன் சைக்கிள் அலவன்ஸ் கூட்டப்பட வேண்டுமென்றும் ஓவசியர் என்ற பதவிப் பெயர் மாற்றப்படவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

தேடுவார் அற்ற வள்ளம்

வல்வெட்டித்துறை, சனி

கடந்த ஒரு வாரகாலமாக தேடுவாரற்ற நிலையில் வள்ளமொன்று தொண்டைமான் ஆற்று அணைக்கட்டுக்குப் பக்கத்தில் நீரினுள் ஒதுக்கப்பட்ட நிலையில் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. பெறுமதி வாய்ந்த இவ் வள்ளத்தை கடந்த ஒரு வாரகாலமாக எடுத்துச் செல்ல ஒருவரும் முன்வராததையிட்டு இப் பகுதி மக்கள் பெரும் ஆச்சரியமடைந்து வருகிறார்கள்.

ரேக்*
நேரடிக் களை கொல்லி
உபயோகித்து
நெல் விளைவைப் பெருக்குங்கள்

ரேக்கின் நேரடித் தொழிற்பாட்டால் களைவகைகள் வேரோடு அழிந்து போகின்றன. களைகளின் இலைகளை வாட்டி எரிப்பதோடு நின்றுவிடாமல், அவை பின் வளர்ந்து நெற்பயிர் வளர்ச்சியைப் பாதிக்காமலும் தடுக்கின்றது.

கோழிச்சூடன், சந்தனக் கோரை, முடிச்சுக் கோரை, கிரிந்தி, பத்தடெல்லா, பிங்குரு முதலான களைவகைகளையெல்லாம் ரேக் பூண்டோடு அழிந்துவிடும். போட்ட உரப் பசளை முழுவதும் நெற் பயிருக்கே கிடைப்பதனால், அது ஓங்கி வளர்ந்து மிகுதியான விளைவு தருகின்றது.

நேரடிக் கொல்லியான
ரேக்கினையே உபயோகியுங்கள்.
நெல் விளைவு பெருகும்.

Monsanto

* மொன்சந்தோ கொம்பனியின் வர்த்தக் குறி.

பாலகன் அலிகான் கொலை வழக்கு

"நள்ளிரவில் 2ம் எதிரிவீட்டில் மதுபோதையில் இருந்தீரா?"

உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டரிடம் வழக்கறிஞர் கேள்வி

திருக்கோணமலை, சனி

பாலகன் அலிகான் கொலை வழக்கு இன்று காலை திருக்கோணமலை நீதவான் திரு. டேனியல் குணரத்தினம் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஜினதாச விஜயநாயக்கா சாட்சியமளித்தார்.

அலிகான் கொலை சம்பந்தமான தகவல் கிடைத்ததும் அலிகானின் சடலத்தை கல்மீட்டியன் குளம், கந்தளாய் ஆகிய இடங்களுக்கும் சென்று தேடியதாகவும் இக் கொலை சம்பந்தமாக ஒரு பெண்ணை முதலில் கைது செய்து புலன் விசாரணை செய்ததாகவும் பின்னர் அவர் விடுதலை செய்யப்பட்டதாகவும் கூறினார்.

உப்புவெளி தபால் நிலைய அதிபர் திரு. சிவானந்தன் என்பவர் கொடுத்த தகவலைத் தொடர்ந்து உப்புவெளிக் கடற்கரையிலிருந்து அலிகானின் சடலத்தை தாம் எடுத்ததாகவும் உதவி இன்ஸ்பெக்டர் சொன்னார்.

20-7-68-ம் திகதி கிடைத்த ஒரு தகவலைத் தொடர்ந்து தாம் ஒரு இரும்பு றங்குப் பெட்டியைத்தேடிக் கண்டுபிடித்ததாகவும் பொது மலசல கூடத்துக்குச் சமீபத்தில் அந்தப் பெட்டி கண்டெடுக்கப்பட்டதாகவும் சாட்சி தெரிவித்தார்.

அந்தப் பெட்டியை மிகக் கவனமாக ஆராய்ந்து பார்த்த போது அந்தப் பெட்டிக்குள்ளிருந்து மஞ்சள் கவர்க்காரப் பெட்டியொன்றும் 19-2-67 திகதியிடப்பட்ட தபால் கந்தோர் ரசீது ஒன்றும் பெயர் மாற்றுவதற்கு விண்ணப்பிப்பதற்கான பத்திரமொன்றும் இருந்ததாகவும் அவற்றையெல்லாம் தாம் பொறுப்பெடுத்த பின்னர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்ததாகவும் உதவி இன்ஸ்பெக்டர் தெரிவித்தார்.

முதல் எதிரியின் மகன் புகாரி அளித்த வாக்குமூலத்தைத் தொடர்ந்தே தாம் முதல் எதிரியைக் கைது செய்ததாகவும் அதன் பின்னர் இரண்டாவது எதிரியின் வீட்டுக்குச்சென்று இரண்டாம் எதிரியை கைது செய்ததாகவும் சாட்சி தெரிவித்தார். அங்கு சங்கிலியையும் கட்டையும் தாம் எடுத்ததாகவும் சாட்சி தெரிவித்தார்.

இரண்டாம் எதிரியின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்கையில் அதிகாலை 12-45-க்கு இரண்டாவது எதிரியின் வீட்டிற்குச் சென்றுவிசாரணைசெய்திருப்பதாக சாட்சி தெரிவித்ததைக் குறிப்பிட்டு அந்த நேரத்தில் அங்கு நீர் போக வேண்டுமா என்று கேட்ட போது, நீதவான் குறுக்கிட்டு 'இது அர்த்தமற்ற கேள்வி' என்றார்.

இரண்டாவது எதிரியின் வீட்டில் நள்ளிரவுக்குப்பின் சென்று மதுபோதையில் அங்கு வீட்டுக்குள்ளேயே நீர் சலமிட்டீர் என்று சாட்சியைப் பார்த்து வழக்கறிஞர் கேட்டபோது, 'இது போன்ற எதிர் தரப்பினரின் அபிப்பிராயங்களை இப்போட்டிக் கேட்பதும் தெரிவிப்பதும் முறையுமல்ல, நியாயமுமல்ல' என்று நீதவான் கூறினார்.

மேல்விசாரணை அடுத்த மாதம் 10-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் வரும் அமெரிக்க மாணவர் குழு

கொழும்பு, சனி

தற்பொழுது இலங்கை வந்துள்ள அமெரிக்க மாணவர் குழுவொன்று விரைவில் யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் செய்யவிருக்கிறது.

இலங்கையில் மாணவர்களின் வாழ்க்கை, கலை, கலாசார விஷயங்கள் பற்றி அறிந்துகொள்வதிலும் இங்குள்ள மாணவர்களுடன் கருத்துப்பரிமாறல் செய்வதிலும் இவர்கள் அக்கறை கொண்டிருக்கிறார்கள்.

இலங்கையில் இரண்டு மாதகாலம் தங்கியிருக்கவிருக்கும் இவர்கள் யாழ்ப்பாணத்தில் 5நாட்கள் தங்குவார்கள். யாழ்ப்பாணத்தில் முக்கிய கல்லூரிகளுக்கு விஜயம் செய்வதுடன், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளுக்கும் இவர்கள் விஜயம் செய்வார்கள்.

இந்தக் குழுவில் 3 பெண்களும், 3 ஆண்களுமிருக்கின்றனர். இவர்களில் இருவர் கலிபோர்னியா பல்கலைக்கழக பட்டதாரிகள். மற்ற நால்வரும் பட்டதாரி மாணவர்கள்.

'மாவை ஆலய சம்பவம் கமிஷன் நியமிக்குக'

அளவெட்டி, சனி

பூட்டப்பட்ட ஆலயக் கதவுகள் எந்நேரத்தில் திறக்கப்படுமோ அந்நேரத்தில் அமைதியாக ஆலயப் பிரவேசம் நடத்தலாம் என்ற தீர்மானத்தை தீண்டாமை ஒழிப்புவெகுஜன இயக்கத்தினர் நிறைவேற்றியுள்ளனர்.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் யாழ்ப்பாணக் காரியாலயத்தில் திரு. நாகரத்தினம் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேறியுள்ளது.

மாவைச் சம்பவம் பற்றி விசாரணை செய்ய ஒரு கமிஷனை நியமிக்க அரசாங்கத்தை கோருவதெனவும் யாழ்நகர மண்டபத்தில் 26ம் திகதி தமது வருடாந்த மகாநாட்டை நடாத்துவதெனவும் இம்மகாநாட்டிற்கு சகல கட்சிகளின் பிரதிநிதிகளை அழைப்பதெனவும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட பதில் மாஜிஸ்திரேட்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். மாவட்ட நீதிமன்ற முடிக்குரிய வழக்கறிஞர் திரு. எஸ். ஞானரத்தினம் இன்றுமுதல் யாழ்.மாவட்ட பதில் மாஜிஸ்திரேட்டாகக் கடமையாற்றுவார்.

மாஜிஸ்திரேட் ஜனாப் எம். ஜமீல், மேலதிக மாஜிஸ்திரேட் திரு. ஏ. டபிள்யு. சேனநாயக்கா ஆகியோர் லீவில் சென்றுள்ளதால் இவர் இம்மாதம் 30ம் திகதிவரை பதில் மாஜிஸ்திரேட்டாகக் கடமையாற்றுவார்.

பௌத்த காங்கிரஸ் உதவி

உடுப்பிட்டி, சனி

வடபகுதியிலுள்ள 5 தமிழ் சிங்கள பாடசாலை மாணவர்களுக்கு பணிஸ் வழங்குவதற்கு ஒழுங்கு செய்வதற்காக யாழ்ப்பாணத்தில் பேக்கரி ஒன்றை நிறுவ பௌத்தகாங்கிரஸ் மகாசபை தீர்மானித்துள்ளது எனத் தெரிகிறது.

கரவெட்டிமேற்கு ஸ்ரீநாரத தமிழ் சிங்கள பௌத்த பாடசாலைத் திருத்தவேலைகளுக்கு பௌத்த காங்கிரஸ் மகாசபை நிதியுதவி அளிக்கவும் தீர்மானித்திருக்கிறதாம். அத்துடன் இங்குள்ள சிறுபான்மைச் சமூகத்தவர்களின் பாவனைக்காகபொதுக் கிணறு ஒன்றை சிரமதான மூலம் அமைப்பதற்காக தென்னிலங்கையை சேர்ந்த பௌத்த வாலிபர்கள் கரவெட்டிக்கு வரவிருப்பதாகவும் தெரிகிறது.

இவர்களுக்கும் பென்ஷன் கிடைக்கும்

கொழும்பு, சனி

1960-ம் ஆண்டுக்கு முன்னர் ஆசிரிய சேவையில் சேர்ந்து இப்போது கட்டணம் வசூலிக்காத தனியார் பாடசாலைகளில் பணியாற்றி வரும் ஆசிரியர்களுக்கு பென்ஷன் வழங்குவது சம்பந்தமாக கல்வி இலாகா நடவடிக்கை எடுத்துவருகிறது. இதுசம்பந்தமாக கட்டணம் வசூலிக்காததனியார் பாடசாலைகளின் அதிபர்களோடு கல்வி இலாகா ஆலோசனை நடத்தியுள்ளது.

இன்று ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணத்தில் சாரணர் விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

காமன்வெல்த் சிரேஷ்ட சாரணர் சேர் சார்ல்ஸ் மக்லனும், இலங்கை சிரேஷ்ட சாரணகமிஷனர் திரு. பிறீஸ்றேயும் யாழ்ப்பாணத்தில் இன்று ஆரம்பமாகவிருக்கும் சாரணவிழாவில் கலந்து கொள்வார்கள்.

யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 1000 சாரணர்கள் இவ்விழாவில் கலந்துகொள்ளவிருக்கிறார்கள். யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் இன்று ஆரம்பமாகும் இவ்விழா 30-ம் திகதி வரை நீடிக்கும். 29ம் திகதி காமன்வெல்த் சிரேஷ்ட சாரணரும், இலங்கை சிரேஷ்ட சாரணக்கமிஷனரும் கலந்து கொள்வார்கள்.

'இருதயவால்வ்' மாற்றம் இங்கு வெற்றி தரவில்லை

கொழும்பு, சனித ப்பட்டவராவார்.

இருதய 'வால்வ்' பொருத்த சத்திர சிகிச்சையினால் இங்கு எதிர்பார்த்த பலன் கிடைப்பதாக இல்லையென்றும் இந்த இருதய 'வால்வ்' மாற்ற சத்திர சிகிச்சையை தொடர்ந்தும் மேற்கொள்வது அவசியம்தானா என்றும் வைத்திய வட்டாரங்களில் அபிப்பிராயம் தோன்றியுள்ளது.

இங்கு இருதய வால்வ் மாற்ற சத்திரச் சிகிச்சை செய்யப்பட்டவர்களில் இதுவரை ஒரேயொருவர்தான் குணமடைந்து இன்னும் சில தினங்களில் ஆஸ்பத்திரியிலிருந்து வீடு திரும்பக்கூடிய நிலையிலிருக்கிறார். பம்பலப்பிட்டியைச் சேர்ந்த டேவிட் சிரிசோ என்பவர்தான் விரைவில் வீடு திரும்பவிருக்கும் இருதய வால்வ் பொருத்தப்பட்டவராவார்.

நேற்று இருதயவால்வ் பொருத்தப்பட்ட 30 வயதான குணபாலா என்பவர் சத்திர சிகிச்சை அறையிலிருந்து வெளியே கொண்டு வரப்பட்ட சிறிது நேரத்தில் காலமானார். ஆசியாவிலேயே இரட்டை இருதய வால்வ் பொருத்தி புதிய சாதனையை நிலைநாட்டிய அனுலா என்ற இளம் பெண்ணின் உடல்நிலை வரவர மோசமடைந்து வருகிறது.

இருதயவால்வ் பொருத்துவதற்கு இவர்கள் சம்மதம் அளித்ததன் பேரில்தான் இந்த சத்திர சிகிச்சைகள் நடைபெற்றபோதிலும் இச் சத்திர சிகிச்சைக்குள்ளானவர்கள் இருவரும் மரணமடைந்துள்ளதைத் தொடர்ந்தே வைத்திய வட்டாரங்களில் கவலையும் சந்தேகமும் எழுந்துள்ளது.

பூட்டப்பட்ட சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாண ஞாயிறு

நேற்றுமுன்தினமிரவு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு சமீபத்திலுள்ள ஒரு நிலையத்திலுள் பூட்டி வைக்கப்பட்டிருந்த ஒருவரது சைக்கிள் திருடப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வயிற்றோட்ட நோய்க்கு பலி

யாழ்ப்பாணம், ஞாயிறு

சில நாட்கள் ஓய்வுக்குப் பின்னர் மீண்டும் வயிற்றோட்ட நோய்க்கு மேலும் ஒரு குழந்தை நேற்றுப் பலியானது.

அச்சுவேலியைச் சேர்ந்த கணேசமூர்த்தி என்ற இரண்டு வயதுக் குழந்தையே நேற்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் மரணமான குழந்தையாகும். [கா. நி.]

யு.என்,பி.

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கும் கண்டி மாநகரசபையின் தற்போதையமேயரும் உதவி மேயரும் யு. என். பி. யைச் சேர்ந்தவர்களே.

நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேறுவதைத் தவிர்ப்பதற்காக, மாநகரசபை அங்கத்தவர்களில் ஒருவரான சுகாதார அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயகா பெருமுயற்சி செய்து வருகிறார்.

காணிதரும்படி அமைச்சர் கடிதம்

குரும்பசிட்டி, சனி

தெல்லிப்பழையில் தன்னியக்க தொலைபேசி பரிவர்த்தனை நிலையம் அமைப்பதற்கு வீமன்காமம் மத்திய சந்தைக் காணியில் ஒரு பகுதியை தரும்படி தபால் தந்தி அமைச்சு மயிலிட்டி கிராமசபையிடம் கடிதமூலம் கேட்டுள்ளது.

சிங்களத்தில் கற்பிக்கும் தமிழ் விஞ்ஞான ஆசிரியர்

யாழ்ப்பாணம்சனி,

தமிழ் விஞ்ஞான ஆசிரியர்கள் சிலர் இப்போது சிங்களத்தில் கற்பிக்கின்றார்கள். புதிதாக ஆசிரியர்களாக நியமிக்கப்பட்ட 200 விஞ்ஞான ஆசிரியர்களில் தமிழ் விஞ்ஞான ஆசிரியர் சிலரும் நியமிக்கப்பட்டார்களென்றும் இவர்கள் சிங்களத்தில் விஞ்ஞான போதனையளித்துவருகின்றனரென்றும் கல்வி இலாகாவிலிருந்து வெளியான ஒருதகவல்கூறுகிறது.

பாடசாலைகளில் கல்வியின் தரத்தை குறைந்த அளவாவது பாதுகாக்கவேண்டுமென்றும் 800 தமிழ் விஞ்ஞான பட்டதாரிகள் வேலையற்றிருக்கின்றனரென்றும் இவர்களை நியமிக்கலாமென்றும் கல்வி அமைச்சருக்கும் பிரதமருக்கும் யாழ்ப்பாணத்தொகுதிப் பிரதிநிதி சமீபத்தில் எழுதியிருந்த கடிதத்தில் கேட்டிருந்தார்.

'ஈழநாடு'
10-வது ஆண்டு
நிறைவையொட்டி
'ஈழநாடு' ஸ்தாபனம்
நடாத்தும்

ஓரங்க நாடகப் போட்டி

தரமான இரு நாடகங்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும்.

1-வது பரிசு ரூபா 200
2-வது பரிசு ரூபா 100

ஓரங்க நாடகப்போட்டியில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் தங்கள் படைப்புகளை 'ஈழநாடு' இதழில் வெளிவரும் இதற்கான கூப்பனுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

முடிவு திகதி
30-11-68

சிறுபான்மைச் சமூகத்தினர் பௌத்தத்தை தழுவுகின்றனர்

உடுப்பிட்டி, சனி

கரவெட்டியில் சிறுபான்மை சமூகங்களின் பிள்ளைகள், பௌத்த மதத்துக்கு மாறவிருக்கிறார்கள். சென்ற வாரம் கரவெட்டி மேற்கிற்கு விஜயம் செய்த அம்பலப்பிட்டி ஸ்ரீநாரத வஜிரராமதாயகதேரோதலைமையிலான பௌத்த காங்கிரஸ்சபைக்கோஷ்டி பௌத்த [illegible] [illegible] கொள்ளவேண்டியதன் தன்மை பற்றியும் போதிப்பதில் அதிக கவனம் செலுத்தியது. அம்பலப்பிட்டி தேரோ பௌத்த மதத்தில் சேர்ந்த சிங்களப்பெயரைப் பூண முன்வருமாறு சிறுபான்மைச் சமூகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்தார்.

இதன்பிரகாரம் அப்பாடசாலை ஆசிரியர் ஆசிரியைகளும் பிள்ளைகளும் பௌத்த மதத்தைத்தழுவிச் சிங்களப் பெயர்பூண விருக்கிறார்கள். இப்பாடசாலையில் விகாரை கொண்டுகட்டப்படவிருக்கிறது.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மே[illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் [illegible] ஆண்டு அக்டோபர் மாதம் 27ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.